


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 4ம் நாள் நிறைமதி (20-07-2024 சனிக்கிழமை) வெளியீடு +94 21 222 9722


## சுந்தரர் குருபூசை



கடகம் நல்லோரை ஆடித்திங்கள் 26ம் நாள் (11-08-2024) ஆடிச் சுவாதி நாண்மீனில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் கொண்டாடப்படும்.



# கடந்த ஆனித்திங்கள் 28ம் நாள் பெருஞ்சாந்தி நடைபெற்ற புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் கோயில் அழகுக்கோபுரம்

படம்: சுந்தரலிங்கம் சோபிநாத் (Studio AS by Sopinath)

# சைவ அறங்காவல் முழுநாள் கருத்தரங்கு 2024



யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவநீதி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற **“சைவ அறங்காவல்”** என்ற முழு நாள் கருத்தரங்கு ஆனித் திங்கள் 29ம் நாள் (13-07-2024) காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணம் வலம்புரி நட்சத்திர விடுதியில் நடைபெற்றது. தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் பொறியாளர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தென்னாடு இளம்புலவர் சிவத்திரு. சிவ செந்தமிழாதன் அவர்கள் தலைமை தாங்கினார்.

தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளைமட கட்டளை தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் அவர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராசா அவர்கள், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள், ஆறுமுகநாவலர் பெருமானின் ஆறாவது தலைமுறை சேயோன் சிவத்திரு. மங்களேஸ்வரன் யதோட்சயன் ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் கருத்துரைகளாக **“சைவ அறங்காவல்”** என்ற தலைப்பில் தலைமை உரையை பொறியியலாளர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்கள் நிகழ்த்தியிருந்தார். அவர் தனது உரையில் திருமுறைகளின் முக்கியத்துவத்தை விளக்கிக்கூறி, இன்றைய சூழலில் நிலவிவரும் சைவப் பண்பாட்டு மாற்றங்களுக்கு மத்தியில் சைவ அறங்காவலின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியிருந்தார். மேலும் “இலங்கையில் சைவம் அன்றும் இன்றும்” என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்களும், “சைவத்தின் சமகால செல்நெறி - சில அவதானிப்புகள்” என்ற பொருளில் கொழும்பு சைவநெறிக் கழகத் தலைவர் மருத்துவர் சிவத்திரு. கிருஷ்ணகுமார் பிரதாபன் அவர்களும், “திருமுறைச் சிறப்பும் சாத்திரச் சிறப்பும்” என்ற பொருளில் தமிழ்நாடு செந்தமிழரசு முனைவர் சிவத்திரு. கி சிவகுமார் ஐயா அவர்களும், “திருமுறை மகத்துவம்” என்ற பொருளில் சைவநீதி அமைப்பின் தலைவர் சிவத்திரு. குணராஜ துரைசிங்கம் அவர்களும் கருத்துரைகளை வழங்கி வைத்திருந்ததோடு, இறுதி நிகழ்வாக thevaaram.org வலைத்தளத்திற்கான அறிமுக உரையை மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்கள் நிகழ்த்தியிருந்தர்.

யாழ் மாவட்ட இந்துக் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்கள், வடக்கு, கிழக்கு பல்கலைக் கழக இந்து ஒன்றிய நிர்வாகத்தினர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள், வடக்கு, கிழக்கு மாகாண அறநெறி ஆசிரியர்கள், யாழ்ப்பாண சைவ அமைப்புகள் மற்றும் திருக்கோயில்களின் நிர்வாகத்தினர் ஆகியோர் இக்கருத்தரங்கில் பங்கு பற்றி பயன்பெற்றனர். மேலும் நிகழ்வில் பங்குபற்றியோர்களுக்கு தென்னாடு இதழ், தென்னாடு ஐம்பூத நாதர் திருக்கோயில் திருநீற்றுபை, திருவாசக புத்தகம் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டதோடு, பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**

# திருக்கேதீச்சரத்தில் திருவாசகப் பெருவிழா






மாணிக்கவாசகப் பெருமானின் குருபூசையை முன்னிட்டு ஈழத்து சிவனடியார் திருக்கூட்டம் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தின் ஏற்பாட்டில் திருவாசகப் பெருவிழா சிறப்பாக நடாத்தப்பட்டிருந்தது. இவ்விழா கடந்த 09-07-2024 செவ்வாய்க் கிழமை மாணிக்கவாசகர் குருபூசை அன்று, திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் இடம்பெற்றிருந்தது.

இவ்விழாவானது தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளைமட கட்டளை தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் திருவருள் முன்னிலையில், ஈழத்து சிவனடியார் திருக்கூட்டம் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தின் தலைவர் சிவநேயத்திருமதி. லோகநாயகி அருளலிங்கம் அம்மையார் தலைமையில் காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெற்றிருந்தது.

காலை அமர்வானது அம்மையப்பர் வழிபாட்டுடன் ஆரம்பானது. இவ்வழிபாட்டை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்திபன் அவர்கள் ஆற்றி வைத்தார். தொடர்ந்து தவத்திரு. சரவணமுத்து அடிகளார் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து வழிபாடு இடம்பெற்றது. தொடர்ந்து தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் தலைமை உரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து மருத்துவக் கலாநிதி சிவகோணேஸ்வரன், சிவபாலன் மற்றும் அவர்களின் குழுவினரின் உள்ளத்தை உருக்கும் திருவாசக உரையுடனான இசை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ‘என்னையும் இருப்பதாக்கினன்’ எனும் பொருளில் தமிழ்நாடு முனைவர் செந்தமிழரசு கி. சிவக்குமார் ஐயா அவர்களும், பேராசிரியர் சண்முகதாஸ் ஐயா அவர்களும், ‘முந்தை வினைமுழுதும் ஒய உரைப்பன் யான்’ எனும் பொருளில் வைத்திய கலாநிதி கார்த்திகைக் குமரன் ஐயா அவர்களும் அருள் உரைகளை வழங்கி வைத்தனர். தொடர்ந்து காலை அமர்வு நிறைவுற்று அடியார்களுக்கு அமுது செய்வித்தல் இடம்பெற்றது. காலை அமர்வின் நிறைவில் அறநெறி ஆசிரியர்களுக்கான பயிற்சி பரீட்சையும் இடம்பெற்றிருந்தது.

மாலை அரங்கமானது சைவப்புலவர் செ. நவநீத குமார் மற்றும் சங்கீதபூஷணம் ஹம்ஸாநந்தி தர்ம பாலன் இணைந்து வழங்கிய திருவாசக இசை உரை நிகழ்வுடன் ஆரம்பமானது. தொடர்ந்து ‘திருவாசகத் தேன்’ எனும் பொருளில் தமிழ்நாடு சிவத்திரு மீ. சிவசண்முகம் ஐயா அவர்களும், ‘யாரைக் கண்டு அஞ்சவேண்டும்’ எனும் பொருளில் கொழும்பு சைவநெறிக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி கி. பிரதாபனின் அவர்களும், ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் மற்றும் திருவாசமடத் தோற்றம் பற்றிய அறிமுக உரையை அருள் அருள்குமரன் ஐயா அவர்களும் என அருளுரைகளை வழங்கி வைத்தனர். தொடர்ந்து அறநெறி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் நிறைவுரை வழங்கி வைக்க, சிவநேயத் திருமதி. லோகநாயகி அருளலிங்கம் அம்மையாரின் நன்றி உரை வழங்களுடன் விழா நிறைவடைந்தது.

**திருச்சிற்றம்பலம்**



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்**
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# சைவ அறங்காவல் கருத்தரங்குக் கருத்துகள்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக சைவ அறங்காவல் முழுநாள் கருத்தரங்கு, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சிந்தனையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இதில் பலவிடயங்களை மடத்தின் சார்பாக, அடியேன் வெளிப்படுத்தியிருந்தேன். அவற்றில் குறிப்பாக சமயப் பணி மற்றும் சமூகப் பணிக்கான வேறுபாடுகள் பற்றிய தெளிவு மற்றும் சமயப் பணிக்கான ஆளணிக் குறைவுகள் பற்றிய கருத்துகள் பகிரப்பட்டன.

கோயில்களின் நோக்கங்கள், அறங்காவல் சபையினரின் நோக்கங்கள் அத்துடன் தினமும் சிவாச்சாரியார்கள் சிவபூசை செய்தல் மற்றும் அறங்காவல் சபையினர் சமய அனுட்டானங்களை செய்தல், சமய தீக்கை பெற்றிருத்தல் பற்றி எடுத்துரைத்தோம். நோக்கங்களின் வழி இயங்குதல் மற்றும் இயங்காமைக்கான காரணங்களைப் பற்றி பேசினோம்.

தமிழர் சொத்துக்களாகிய திருமுறைகள் மற்றும் சித்தாந்தசாத்திரங்களின் மேன்மை பற்றியும் அவற்றினை மக்களிடையே கொண்டுசெல்ல வேண்டும் என்ற கருத்துகளையும் பரப்பினோம். குறிப்பாக மாணவர்களை அறநெறி பாடசாலைகள் மற்றும் பிரதான பாடசாலைகளில் சமய அறிவூட்டலின் ஊடாக சமய நெறிக்குள் உள்வாங்குதல் பற்றி கருத்துக்களை பகிர்ந்தோம்.

மாணவர்களின் சமய வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சக மாணவர்களின் பங்கு பற்றியும், அத்துடன் குறிப்பாக இந்துக் கல்லூரிகள் ஆரம்பித்த நோக்கங்களுடன் நடாத்தப்படுகின்றனவா என்ற ஆதங்கமும் பகிரப்பட்டது. அரசாங்க சம்பளத்துடன், தனியார் முகாமைத்துவதுடன் இயங்கும் வேற்றுமதப் பாடசாலைகளைப் போல் சைவப் பாடசாலைகளும் உருவாகவேண்டும் என்ற கருத்தும் முன்வைத்தோம். இதுபோல், முன்னர் சைவ வித்தியா விருத்தி சங்கம் (உனைெர டீழயசன) பல சைவப் பாடசாலைகளை நிர்வகித்து வந்ததை நினைவுபடுத்தினோம். மாணவர்கள் சமயவழி இல்லாமல் கல்வி மட்டுமே என்று நின்று உயர்நிலையை அடையமுடியாது. சமயக் கல்வியின் வீழ்ச்சியும் மாணவர்களின் பிறழ்வான வாழ்விற்கு உடந்தையாகிறது என்பதை ஆழமாக உணரவேண்டும்.

எவ்வாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் பலத்துடன் செயற்படுகின்றனவோ, அதுபோல் பல்கலைக்கழக சைவ / இந்து மாணவர் சங்கங்களும் பலம் மற்றும் துணிவுடன் இயங்கவேண்டும் என்றும், ஊர்களில் உள்ள இந்து இளைஞர் கழகங்களும் மற்றும் சமய அமைப்புகளும் நோக்கங்கள் மாறாமல் சமயப்பணிக்கு முன்வரவேண்டும் என்றும் எடுத்துரைத்தோம்.

மேலாக, தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி, காணி விலை உயர்வு, விலைவாசி மற்றும் பல காரணங்களால் குடும்பக்கட்டுப்பாடு தலையெடுக்கிறது. இது சைவ மக்களின் சனத்தொகை ஏன் தமிழ் மக்களின் எண்ணிக்கை, சனத்தொகைப் பரம்பலில் கனதியான மாற்றத்தினை ஏற்படுத்துகிறது. இதனால் பலவழிகளிலும் சமயத் தாக்கங்கள் மேலோங்கும் வாய்ப்பு உள்ளது என்று எடுத்துரைத்தோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக சமய வாழ்வு என்பது வீட்டிலே தான் தொடங்குகிறது. ஆகவே பெற்றோர்கள் இதில் முக்கிய கவனம் எடுத்து, சமய வாழ்வியல் பிள்ளைகளிடத்தில் வேரூன்ற தினமும் உழைக்கவேண்டும். அறம் அற்று எந்த உயர் பதவிகளிலும் அலங்கரிப்பது சிறப்பாகாது.

சைவ அறங்காவல் என்பது, சைவத்தினை பிறரிடம் இருந்து காப்பது என்று மட்டும் பொருளல்ல மேலாக நாங்கள் சைவ நெறியில் வழுவிச் செல்லாமல், நெறிநின்று நீடுவாழ வழிசமைத்தலும் இதில் அடங்கும். ஆகவே தமிழர்களாகிய நாங்கள், எமது மரபுவழி மண்ணின் சமயமாகிய இன்றைய சைவ சமயத்தினை உள்வாங்கி, அதன்வழி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபெறுவோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் பெரியபுராண பேருரை வெளியீட்டின் 75ம் ஆண்டு வைரவிழா



தமிழ்நாடு கோவை அரன்பணி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், கடந்த 12-07-2024 வெள்ளிக்கிழமை ஆனித் திருமஞ்சனம் அன்று, சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் பெரியபுராண பேருரை வெளியீட்டின் 75ம் ஆண்டு வைரவிழா நிகழ்வானது திருப்பேரூர் குரு திருமண மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

திருத்தொண்டர் புராணத்திற்கான பேருரையை கோவை சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியார் ஐயா அவர்கள், 12-07-1948 அன்று தில்லையில் அரங்கேற்றினார். அவ் வெளியீட்டின் 75ம் ஆண்டு வைரவிழாவாகவே இவ்விழா முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வை அரன்பணி அறக்கட்டளையின் தலைவர் சிவத்திரு. பவானி. அ. தியாகராசன் ஐயா அவர்கள் முன்னின்று நடத்தியிருந்தார்.

அந்தவகையில் காலை 6.30 மணியளவில் திருப்பேரூர் பட்டிப்பெருமான் சந்நிதியில் பேருரைகளை வைத்து வழிபட்ட பின் சிவக்களிற்றின் மீது வைத்து மாட வீதி வலம் வந்து அருள்மிகு நடராசப் பெருமானின் திருவடியில் வைத்து வழிபாடுகள் இடம்பெற்றன.

காலை வழிபாட்டை தொடர்ந்து 9.30 மணியளவில் கருத்தரங்கம் ஆரம்பானது. கருத்தரங்க அமர்வில் கடவுள் வாழ்த்தினைத் தொடர்ந்து, வரவேற்புரையை அரன் பணி அறக்கட்டளையின் தலைவர் சிவத்திரு. பவானி. அ. தியாகராசன் ஐயா அவர்கள் வழங்கி வைக்க, தலைமை உரையை முதுபெரும் புலவர் பேராசிரியர்

சிவத்திரு. ந. இரா. சென்னியப்பனார் ஐயா அவர்கள் வழங்கி வைத்தார்.

தொடர்ந்து வாழ்த்துரைககளை நல்லாசிரியர் அப்பரடிப்பொடி புலவர் சிவத்திரு. வீ. சொக்கலிங்கம் ஐயா மற்றும் கற்பகம் பல்கலைக்கழகம் வேந்தர் சிவத்திரு. இராச. வசந்தகுமார் ஐயா ஆகியோர் வழங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து ஊமுளு ஐயாவின் பேருரையின் சிறப்புகள் எடுத்துரைக்கும் வண்ணமாக பேரூர் சிவத்திரு. ப. குமரலிங்கம் ஐயா அவர்கள், பவானி சிவத்திரு. அ. வேலுச்சாமி ஐயா அவர்கள், பெங்களூாரு சிவத்திரு. மதன்முரளி ஐயா அவர்கள், குடவாசல் புலவர் சிவத்திரு. இராமமூர்த்தி ஐயா ஆகியோர் அருளுரைகளை வழங்கியிருந்தனர்.

பெரியபுராண ஆசிரியப் பெருமக்களுக்கு சிறப்புச் செய்து விழாப் பேருரை வழங்குவதற்காக திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருப்பேரூராதீனம் 25ம் பட்டம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் மற்றும் கௌமார மரபு தண்டபாணி சுவாமிகள் வழிவழி சிரவையாதீனம் கௌமார மடாலயம் நான்காம் பட்டம் குருமகா சன்னிதானம் திருப்பெருந்திரு இராமானந்த குமரகுருபர சுவாமிகள் ஆகியோரும் எழுந்தருளியிருந்தார்.

இறுதி நிகழ்வாக நன்றியுரையை கோவை சிவத்திரு. ர. மணிகண்டமூர்த்தி அவர்கள் வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வாவிபாளையம் ஞானபாரதி சிவத்திரு. வெ. அனந்தகிருட்டிணன் அவர்கள் தொகுப்புரை வழங்கி வைத்தலுடன் விழா இறையருளுடன் நிறைவடைந்தது.

**திருச்சிற்றம்பலம்**



# தமிழ்வேதமாகிய திருக்குறளில்

# தமிழர் தத்துவம் சைவசித்தாந்தம்

### திருக்குறளை அனுகு முறை

### தோற்றுவாய்:

குறுகிய வெண்பாக்களால் ஆகியதால் குறள் என்னும் பெயரை உடையதாயிற்று அதன் தெய்வத்தன்மை பற்றித் ‘திரு’ என்னும் அடைமொழியைப் (Prefix) பெற்றது. எனவே “திருக்குறள்” என்னும் பெயர், வகையால் அமைந்ததே அன்றி, அந்நூலின் உட்பொருள் நோக்கி அமைந்ததன்று என்பது பெறப்படும். சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று “திருவருட்பயன்” என்பது. அதுவும் குறள் வெண்பாப் போல அமைந்துள்ளது. திருவருளின் பயனை ஆன்மா பெறு தற்குரிய செய்திகளை அந்நூல் உட்பொருளாகக் கொண்டிருப்ப தால், அது திருவருட்பயன் என்னும் பெயரைப் பெற்றுது. அதுபோல, திருக்குறளின் உட்கிடை யாது என்பதைத் திருக்குறட் பெயரைக் கொண்டு அறிய முடியாது.

### பொது மறை :

திருக்குறளுக்கு வழங்கும் பல பெயர்களுள் ‘பொதுமறை’ என்பதும் ஒன்று. திருக்குறளைப் பொதுமறை என்று கூறுவதற்கு என்ன காரணம்? நாடு, இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாமல், மனித சமுதாயம் முழுவதும் ஏற்றுக் கொண்டு, பின்பற்றத்தக்க கருத்துக்கள் திருக்குறளில் உள்ளன. ஒவ்வொரு மனிதனும் எப்படி வாழவேண்டும், பிறரை எப்படி மதிக்க வேண்டும், ஓர் இல்வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும், ஒரு துறவி என்றால் அவர் எத்தகைய அறங்களை மேற்கொள்ள வேண்டும், அரசுப் பொறுப்பில் இருப்பவர் எத்தகைய நடை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும், ஒரு நட்பு எப்படி இருக்க வேண்டும், எப்படிப் பட்டவரோடு நட்புறவு கொள்ளக் கூடாது, பொருளை எப்படிப் பேண வேண்டும், எப்படிச் செலவு செய்யவேண்டும், ஒரு தந்தை எப்படி மக்களுக்கு நன்மை செய்யவேண்டும், ஒரு மகன் எப்படிப் பெற்றோர்க்கு உதவ வேண்டும், விருந்து என்றால் யாது, விதி எவ்வளவு வன்மை மிக்கது, விதியை வெல்வதற்கு வழியாது, ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும், மது அருந்துவதால் வரும் கேடு என்ன, புலால் உணவு தின்பது ஏன் தவிர்க்கப்பட வேண்டும், இறை வழி பாட்டின் இன்றியமையாமை யாது என்பன போன்ற பொதுவான அறவுரைகளை மிகவும் நாகரிகமான முறையில் திருவள்ளுவர் கூறியருளியுள்ளார்.



செந்நெறிச் செல்வர் அமரர் சிவத்திரு.கு.வைத்தியநாதன் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய முதல்வர்

“மறை” என்ற சொற்கு, “வேதம்” என்று பொருள். (A devine percept) அஃதாவது மனிதனின் அறிவுக்குப் புலப்படும் வகையில் இறையுணர்வு களை எடுத்துக் கூறும் செவ்விய நூலே மறை ஆகும். இந்நூலின் கருப்பொருளாக இருப்பது “மறை மொழி” எனப்படும். மறை மொழி (Incantation) என்பது மந்திரம் ஆகும். பொது மறை” என்பது, மனித இனம் அனைத்திற்கும் பொருந்தும் பொதுவான செய்திகளைக் கூறுவது ஆகும். ஆகவே திருக்குறளைப் பொதுமறை என்று கூறுகின்றார்களே அன்றி, உலகில் உள்ள எல்லா இனத்தினர்க்கும், மொழியினர்க்கும், மதத்தினர்க்கும், திருக்குறளே வேதம் என்னும் பொருளில் அன்று. எடுத்துக்காட்டாக, திருக்குறள் மறுபிறப்புக் கொள்கையை உடன்படுகிறது. உலகில் உள்ள பெரும்பாலான மதத்தவர்கள் மறுபிறப்புக் கொள்கையை ஏற்பது இல்லை. எனவே திருக்குறளைப் பொதுமறை என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? எனவே திருக்குறள் உலகப் பொதுமறை அன்று.

சைவ சமயத்தில் வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்னும் கொள்கை உள்ளது. சைவர்கள் வாழ்வில் பொதுவாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை வேதம் கூறுகிறது. சைவர்கள் இறையருளுக்கு உரியவர் ஆகும் வகையில் சிறப்பாகக் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளைச் சிவாகமம் (கித்தாந்த சைவம் ) கூறுகிறது. இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டே, வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்னும் அறவுரை எழுந்தது. எனவே திருக்குறளைப் “பொதுமறை” என்னும் நோக்கில் அணுகும் பொழுது, உலகில் உள்ள மனித இனம் முழுமைக்கும் பொதுவான செய்திகளை உடைய ஒரு வேதம் என்று கருதுவது நல்லது. திருவள்ளுவர் மனிதனைத் தெய்வம் ஆக்கும் முயற்சியில் இந்நூலைச் செய்தார் என்று கூறினால், அது மிகையாகாது. அந்த அடிப்படையில் வைத்துத் திருக்குறளைப் ‘பொதுமறை’ என்று கூறலாம்.

### தமிழ் மறை

‘தமிழ் மறை’ என்ற தொடர்க்குத் “தமிழர் வேதம்” என்பது பொருளாகும், எனவே, திருக்குறள் தமிழர்க்கு வேதம் ஆகி, மனித இனத்திற்குப் பொதுமறையாக உள்ளது, “வேதப் பொருளால் மிகவிளங்கி ........ உள்ளம் உருக்கும்” என்று மாங்குடி மருதனாரும், “வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார் ஒத, வழுக்கு அற்றது உலகு” என்று மதுரைப் பெருமருதனாரும் திருவள்ளுவமாலையில் கூறியிருப்பது, இங்குக் கருதத்தக்கது.

வடமொழியில் ரிக், யசுர், சாம, அதர்வ வேதங்கள் இருப்பதுபோல், தமிழ் மொழியிலும் அறம்,பொருள், இன்பம், வீடு, என்னும் நான்மறை இருந்திருக்கின்றன என்று, திருமுறைகள் அருளிச்செய்கின்றன. தமிழ் நான்மறை இப்போது கிடைக்கவில்லை. கடல்கோளால் அழிந்திருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். தமிழர்க்கு உரிய வேதம் ஆகிய நான்மறை எப்படி இருந்திருக்கும் என்பதைத் திருக்குறள் அமைந்திருக்கும் முறையை வைத்து அறியமுடிகிறது. இவ்வுண்மை, “அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவு”என்று திருவள்ளுவரின் தெய்வத் தன்மையை, மாமூலனார் என்னும் புலவர் கூறுவதிலிருந்து புலன் ஆகிறது. (திருவள்ளுவமாலை-8)

தமிழ் மரபுப்படி அறத்தையும்,பொருளையும் புறப்பொருளாகவும், இன்பத்தையும்,வீட்டையும் அகப்பொருளாகவும் திருவள்ளுவர் அமைத்திருக்கிறார். புறம் - தனிமனிதனுக்குரிய அறத்தையும் பொது மனிதனுக்குரிய அறத்தையும் கூறுவது. அகம்-ஒருவன் ஒருத்திக்குரிய மறைவையும், ஆண்டான் அடிமைக்குரிய மறை நிலையையும் கூறுவது. எனவே, நான்மறைப் பொருள் முழுவதையும் திருக்குறளில் காணலாம்.

தமிழ்வேதம் தொடரும்...

# திருவாதவூர் மாணிக்கவாசகர் அவதாரத்தலத்தில் திருவாசக அரங்கம் திறப்பு




தமிழ்நாடு கோவை அரன்பணி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், திருவாதவூரில் மாணிக்கவாசகர் அவதாரம் செய்த அவரது இல்லம் அமைந்த அருள் வளாகத்தில் நாளும் திருவாசகம் முற்றும் ஓதுதல் அரங்கம் மற்றும் சிவனடியார் தங்குமிடம் என்பன அமைக்கப்பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ளது. இவ் அருட்பணி கடந்த ஆனித் திங்கள் 23ம் நாள் (07-07-2024) ஞாயிற்றுக்கிழமை அன்று, அரன்பணி அறக்கட்டளையின் தலைவர் சிவத்திரு. பவானி. அ. தியாக ராாசன் ஐயா அவர்கள் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

அந்தவகையில் முதல் நாள் நிலத்தேவர் வழிபாட்டினை முடித்துக்கொண்டு, காலை 7 மணியளவில் அம்மையப்பர் வேள்வியுடன் நிகழ்வு ஆரம்பாமாகியிருந்தது. அதனைத் தொடர்ந்து திருவமுது செய்வித்தல் இடம்பெற்று, தொடர்ந்து மாணிக்கவாசகர் திருவுருவம் மற்றும் திருவாசகம் என்பன திருமறைநாதர் திருக்கோயிலிருந்து மாணிக்கவாசகர் அவதாரத்தலம் வரை சிவக்களிற்றில் திருவீதியுலாவாக சுமந்து வரப்பட்டது.

தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்ற பொறுப்பு தலைமை நீதிபதி மாண்புமிகு நீதியரசர் சிவத்திரு. அரங்க. மகாதேவன் அவர்கள் திருவாசக அரங்கத்தை திறந்து வைக்க நிகழ்வுகள் ஆரம்பமானது. திறப்பு விழா நிகழ்வில் வரவேற்புரை மற்றும் திருப்பணி குறித்த திட்ட விளக்க உரையை அரன் பணி அறக்கட்டளையின் தலைவர் சிவத்திரு. பவானி. அ. தியாகராாசன் ஐயா அவர்கள் வழங்கி வைக்க, தலைமை உரையை முருக கவி சிவநேயச் செல்வர் சிவத்திரு. செ. ராஜேந்திரன் அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து விழாப் பேருரையை மாண்புமிகு நீதியரசர் திரு. அரங்க. மகாதேவன் அவர்கள் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. ரா. சுரேஷ்குமார் அவர்கள் திருவாசகம் நூல் வெளியிட்டு விழாச் சிறப்புரை வழங்கி, நூல் வெளியீடு செய்து வைத்தார். தொடர்ந்து அடியார் பெருமகனார்களுக்கு திருவாசக நூல் வழங்கல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பண்ணிசைப் பேரறிஞர், திருமுறைக் கலாநிதி மதுரை பொன். முத்துக்குமரன் ஓதுவார் மற்றும் திருமுறைக் கலாநிதி தெய்வத் தமிழிசைச் செல்வர் மயிலாடுதுறை சொ. சிவகுமார் ஓதுவார் ஆகியோர் குழுவினரால் திருவாசக இசை அரங்கம் நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து மாலை 5.30 மணியளவில் மாலை கருத்தரங்கு அமர்வானது இறைவழிபாட்டுடன் ஆரம்பமானது. இவ் அமர்வில் மதுரை ஆதீன 293 வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் தலைமை உரை வழங்கினார். தொடர்ந்து திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீன திருக்கயிலாய பரம்பரை 18 வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் மற்றும் அருட்குருநாதர் ஒளியகம் சிவத்திரு.ந. ஒளியரசு ஐயா ஆகியோரும் திருவருள் முன்னிலை வகித்து அருளுரைகளை வழங்கினார். தொடர்ந்து சிவத்திரு.சோ.சோ.மீ. சுந்தரம் ஐயா அவர்கள், சித்தாந்த செம்ம புரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

இறுதி நிகழ்வாக நன்றியுரையை கோவை திருமதி. ஞ.



சந்திரபிரபா அவர்கள் வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வாவிபாளையம் ஞானபாரதி சிவத்திரு. வெ. அனந்தகிருட்டிணன் அவர்கள் தொகுப்புரை வழங்கி வைத்தலுடன் விழா இறையருளுடன் நிறைவடைந்தது.

திருச்சிற்றம்பலம்




**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(19-06-2024) – இணையர் செந்தில்குமரன் ரூபீஹனுஷா தம்பதிகளின் மங்கள மனையறம் ஏற்கும் விழா தெய்வத்தமிழில் கிளிநொச்சியில் ஆற்றி வைக்கப்பட்டது. இவ்வழிபாடுகளை தமிழ்நாடு சிவத்திரு. சிவமுருகு இளவெனில் ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார்.

(19-06-2024) – ஆனித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன.

(21-06-2024) – ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவிற்காக தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில் வளாக தெய்வநெறிக் கழகத் தலைவர் தவத்திரு. சிவானந்த சுந்தரானந்த சரஸ்வதி சுவாமிகள் மற்றும் அவர்களின் சீடர்களும் தென்னாட்டிற்கு வருகை தந்து வழிபாடு ஆற்றியிருந்தனர். இவர்களுடன் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகளும் வருகை தந்திருந்தார்.

(21-06-2024) – தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில் நிறைமதி வழிபாடுகளும், நாற்பத்து ஆறாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த செந்தமிழ்வேள்வித் தொண்டர் சிவமுருகு இளவேனில் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்கள், வைத்தியர் சிவத்திரு. சிவமகாலிங்கம் அரவிந்தன் அவர்கள், யா/ சிதம்பரக் கல்லூரி ஆசிரியர் சிவத்திரு. கலாநிதி சு.குணேஸ்வரன் அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் இந்நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக, நடைபெற்று முடிந்த காபொத உயர்தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

(23-06-2024) – இணையர் பாரதி குலோபிகா தம்பதியினரின் மங்கள மனையறம் ஏற்கும் விழாவை முன்னிட்டு, ஐம்பூதநாதர் திருக்கோயிலில் சிறப்பு திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றன.

(03-07-2024) – ஆனித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன.

(09-07-2024) – மாணிக்கவாசகர் குருபூசை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

(12-07-2024) – ஆனி உத்தர சிறப்பு திருமஞ்சன சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாடுகள் அதிகாலை 4.30மணியளவில் திருமஞ்சனத்துடன் ஆரம்பமாகி 6மணியளவில் நிறைவடைந்தது.

(12-07-2024) – இணையர் அகல்யன் பிரியவதனி தம்பதிகளின் புதுமனைப்புகுவிழா வழிபாடுகள் தெய்வத்தமிழில் ஆற்றி வைக்கப்பட்டது.

(12-07-2024) – சிவத்திரு. இராசரத்தினம் நடராச அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் இடம்பெற்றன.

(13-07-2024) – யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவநீதி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற **“சைவ அறங்காவல்”** என்ற முழு நாள் கருத்தரங்கு, காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணம் வலம்புரி நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளைமட கட்டளை தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் அவர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராசா அவர்கள், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள், ஆறுமுகநாவலர் பெருமானின் ஆறாவது தலைமுறை சேயோன் சிவத்திரு. மங்களேஸ்வரன் யதோட்சயன் ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் கருத்துரைகளை தென்னாடு முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா , கொழும்பு சைவநெறிக் கழகத் தலைவர் மருத்துவர் சிவத்திரு. கிருஷ்ணகுமார் பிரதாபன், தமிழ்நாடு செந்தமிழரசு முனைவர் சிவத்திரு. கி சிவகுமார் ஐயா, சைவநீதி அமைப்பின் தலைவர் சிவத்திரு. குணராஜ துரைசிங்கம் , மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா ஆகியோர் வழங்கியிருந்தனர்.

(17-07-2024) – ஆடிப்பிறப்பு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

### கௌமார மதம் என்றொரு மதம் உண்டா?

இக்காலப் சைவசமயப் பாடத்திட்டங்களிலும் சைவசமய நூல்களிலும் சைவ எழுத்தாளர் பலரும் இந்திய சமயங்கள் என்பது சண்மதங்கள் என்றும், அதில் முருகப்பெருமானை வழிபடும் சமயம் கௌமாரமதம் என்றும் எழுதி வருகின்றனர். இந்தப் புதியபோக்கு அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்டவொன்றென்பதனால், இதுபற்றிச் சைவசமயத்தார் தெளிந்திருத்தல் அவசியம். சமயம் என்றொன்று உண்டென்றால், அதில் இறைவன்,உயிர்,உலகம் முதலியவற்றை விளக்குவதும், இன்பம் துன்பம் சொர்க்கம் நரகம் முத்தி முதலியவற்றை விளக்குவதும், இறப்பு பிறப்பு என்பவற்றை விளக்குவதும், இறைவனுக்கும் உலகுக்கும் இறைவனுக்கும் உயிருக்கும் உயிருக்கும் உலகுக்கும் இடையேயான தொடர்புகளை விளக்குவதுமான கொள்கைகள் ஓரளவேனும் கூறப்பட்டிருக்கும். இவ்வாறான கொள்கைகளை விளக்குவதற்கு அந்தச் சமயங்களுக்குக்கென்றும் அதன் உட்பிரிவுகளுக்கென்றும் சிறப்பான நூல்கள் உண்டு. சைவசமயம் என்றால் சைவசித்தாந்தம்,சிவாத்வைதம்,சிவசமவாதம் முதலிய பல்வேறு கொள்கைகளும் அவற்றின் வழியதான உட்பிரிவுகளும் உண்டு. வைணவசமயம் என்றால் விசிட்டாத்வைதம்,துவைதம் முதலிய கொள்கைகளும் அவற்றின்வழியதான உட்பிரிவுகளும் உண்டு. இதுபோல், வைதிக நிரிசுவரவாதமதம், சுமார்த்தமதம், சமணமதம், பௌத்தமதம்,

சீக்கியமதம், கிருத்தவமதம், இசுலாமியமதம் முதலியவற்றுக்கும் கொள்கைகளும் உட்பிரிவுகளும் உண்டு. இதுபோல், கௌமாரமதக் கொள்கை என்ன? அதன் உட்பிரிவுகள் என்ன? என்னும் கேள்விக்கு விடையில்லை! ஒரு நாடு இருந்தால் அதற்கென்று குறைந்தபட்சம் ஒரு அரசியல் சட்டமேனும் இருத்தல் வேண்டும். அதுபோல், சமயம் என்றொரு சொல்லால் நாம் ஒன்றைக் குறிக்கின்றோம் என்றால், அதற்கென்று ஒரு தனித்துவமான விளக்கக் கொள்கைகள் இருத்தல் வேண்டும். கௌமாரமதம் என்னும் சொற்பதத்தால் கூறப்படும் நெறி ஒரு பிற்கால இட்டுக்கட்டு என்பதினால், அதற்கென்று இறை- உயிர் - உலகு முதலிவற்றை விளக்கும் எந்தவொரு கொள்கையும் இல்லையாகும்.

மேலும், சைவசமயத்துக்கென்று சிவாகம நூல்கள், மெய்கண்ட சாத்திரங்கள், பன்னிருதிரு முறைகள் உண்டு. வைணவசமயத்துக்கென்று வைகாசன ஆகமம், பாஞ்சராத்திர ஆகமம், இராமனுூசர் எழுதிய பிரம்மசூத்திரப்பாடியம், மத்துவர் எழுதிய பிரம்மசூத்திரப் பாடியம்,ஆழ்வார் பாசுரங்கள், பகவத்கீதை என்பன உண்டு. சுமார்த்தமதத்துக்கென்று மனுசுமிருதி நூல்கள், ஆதிசங்கரர் எழுதிய பிரம்மசூத்திரப்பாடியம், ஆதிசங்கர் எழுதிய விவேக சூடாமணி, ஆதிசங்கர் எழுதிய உபநிடத உரைகள், பகவத்கீதை என்பன உண்டு. இதுபோல் பௌத்தத்திற்கு திரிபீடகம் என்று ஒவ்வொரு சமயத்துக்கும் தனித்துவமான நூல்கள் உண்டு. அதுபோல், கௌமாரமதத்திற்கென்று ஏதேனும் ஒரு தத்துவக்கொள்கை விளக்க நூல் உண்டோவென்றால், அப்படியென்று எதுவும் இல்லையாகும். சிலர், குமாரதந்திர ஆகமத்தை கௌமாரமத நூல் என்று மயங்குவர். அது சிவாகமங்களில் ஒன்றாகிய இலிதாகமத்தின் உபாகமங்களில் ஒன்றாகும். மேலும், இந்த ஆகமம் பூசை முறைகளைக் கூறுகின்றனவேயொழிய, எந்தவொரு தத்துவக்கொள்கையையும் முன்வைக்கவில்லை.அத்தோடு, இந்த ஆகமநூல் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டதாகவே வுள்ளது. அதாவது, அனைத்து மதங்களும் அந்தந்தக் கடவுளின் வாக்காகவே தமது மத நூல்களைக் கொள்கின்றன. கௌமாரமதத்திற்கென்று அப்படியொரு நூல் இல்லை.

சைவசமயத்திற்கென்று சமயகுரவர் நால்வரும் அகச்சந்தானகுரவர் நால்வர் புறச்சந்தான குரவர் நால்வர் என்றும் குருபரம்பரை உண்டு. நாயன்மார்கள் அருளாளர்கள் என்று அடியார் உண்டு. வைணவசமயத்துக்கும் ஆழ்வார்கள், இராமனுூசர்,மதவர் என்று குருபரம்பரையும் அடியார் கூட்டமும் உண்டு. சுமார்த்தமதத்திற்கு ஆதிசங்கரர் என்றும் அவர்வழியில் சங்கராசாரிய குருமரபுகளும் உண்டு. இதுபோல், ஒவ்வொரு சமயத்திற்கும் குருபரம்பரையும் அடியார் கூட்டமும் இருக்கும். ‘‘கௌமாரமத குருபரம்பரை யாது? அடியார் கூட்டம் யாது?’’ என்னும் கேள்விகளுக்கு விடையில்லை என்பதே வெளிப்படையாகும்! முருகப்பெருமானின் அருட்திறத்தைக் கூறும் திருமுருகாற்றுப்படையே முருகவழிபாட்டில் எமக்குக் கிடைத்துள்ள முதல் பத்தி இலக்கியமாகும். திருமுருகாற்றுப்படையில் “ஆல்கெழுகடவுள் புதல்வ மால்வரை மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே-‘’ என்று, சிவபெருமான் உமாதேவியார் குமரனாகவே முருகப்பெருமான் அருளப்பட்டுள்ளார். எனவே, திருமுருகாற்றுப்படையை அருளிய நக்கீரர்பெருமான் முருகவழிபாட்டை சைவசமயத்திற்குப் புறம்பானவொன்றாக கருதியிருக்கவில்லை என்பது முடிவாகும்.

முருகப்பெருமானின் அருட்சிறப்பை உணர்த்தும் கச்சியப்ப சிவாசாரியப்பெருமான் அருளிய கந்தபுராணம்,

**இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிதுமேவிச்**
**சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி தன்னில் சேர்வர்**
**அந்தமில் அவுணர்தங்கள் அடல் கெட நின்ற செவ்வேள்**
**கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே**

முருகவழிபாட்டினால் சிவகதியே சேரும் என்று முருகனைச் சிவனாகவே காட்டுகின்றது. முருகப்பெருமானால் நாள்தோறும் திருத்தி எழுதப்பட்டதாகப் போற்றப்படும் கந்தபுராணம், முருகவழிபாட்டால் சிவகதியே சேரும் என்கின்றதேயொழிய் சிவகதிக்கு வேறான குகபதம் என்ற ஒன்றைக் கூறவில்லை என்பது இதனாற் தெளிவாகும்.

முருகசாரூபமுத்தி பெற்றவரே (அபரசுப்பிரமணியர்) திருஞானசம்பந்தப் பெருமானாகத் தோன்றி சைவசமயத்தைக் காத்தருளினார் என்று அருணகிரிநாதப்பெருமான் அருளிச் செய்கின்றார். அதாவது, ‘‘சைவ முதல் குருவாயே சமணர்களைத் தெறுவோனே’’ என்று அருணகிரிநாதப்பெருமான் அருளிச்செய்துள்ளாரேயொழிய் கௌமாரமதத்தன் என்றோ, அம்மதத்தைக் காக்கத் தோன்றியவன் என்றோ முருகப்பெருமானைப் பாடியிருக்கவில்லை. குமரகுருபரர்,குமரகுருதாச பாம்பன் சுவாமிகள், சிவயோகசுவாமிகள் என்று எந்தவொரு அருளாளரும் முருகவழிபாட்டைத் தனிச்சமய வழிபாடாகக் காட்டியிருக்கவில்லை.

(தொடரும்)

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



## ஆடி பிறந்தது!

தமிழர் மரபில் மிக முக்கியமான காலப்பகுதியாகக் கொள்ளப்படுகின்ற ஆடித் திங்கள் பிறந்துவிட்டது. விவசாயப் பெருங்குடிகளாக நாகரிகம் பெற்று வளர்ந்த தமிழர்கள், உழவுக்கு நிலத்தை தயார் செய்கின்ற காலம் இது. உழவு எருதுகளும் கடினமான தரையைப் பிழக்கும் ஏர்களும், இவற்றோடு வயல் காட்டில் வியர்வை வழியப் போராடி நிற்கும் உழவர்களும் எம் காட்சிக்கு வருகின்றனர். எனினும் இயந்திரமயமான இன்றைய உலகில் இக் காட்சிகள் அரிதாகிவிட்டாலும், எம் பண்டைய பண்பாட்டின் எச்சங்களை நாம் சில இடங்களில் காண்கின்றோம்.

ஆடித் திங்களை உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துயிர் தரவல்ல கூழும் கொழுக்கட்டையும் கொண்டு வரவேற்பார்கள் தமிழர்கள். இவ் நிறையுணவுகளே வயலில் பாடுபடும் விவசாயிகளுக்கு வேண்டிய அனைத்து ஊட்டங்களையும் வழங்குகின்றது. உணவுப்பண்பாட்டிலும் அறிவியலை வைத்தவர்கள் நாமல்லவா? எனினும் இன்று, எம் மரபார்ந்த உணவு வகைகள் எம் கொண்டாட்டங்களிலும், வாழ்வியல் சடங்குகளிலும் ஓரம்கட்டப்பட்டு, உடலுக்கு எவ்வித பயனுமற்ற மாறாக கெடுதலே அதிகம் செய்யும் வகையான உணவுகள் பரிமாறப்படுவது கவலையே! நிற்க. இந்த ஆடித் திங்கள் பல்வேறு சிறப்புக்களைக்கொண்டது. திதி, கிழமை, நட்சத்திரம் என அனைத்தும் சிறப்பு பெறுவதும் இந்த ஆடி திங்களில் தான். ஆடித் திங்களில் ஆடிப் பிறப்பு, ஆடி செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடி ஞாயிறு, ஆடிப் பெருக்கு, ஆடிக் கார்த்திகை, ஆடிப்பூரம், ஆடி மறைமதி, ஆடி நிறைமதி என அனைத்தும் சிறப்புக்குரிய நாட்களாகும்.

தை முதல் நாளையும் ஆடி முதல் நாளையும் ஈழத்தவர்கள் கொண்டாடுகின்றனர். ஒரு ஆண்டின் தொடக்கத்தையும் அரை ஆண்டின் தொடக்கத்தையும் கொண்டாடுகின்றனர். இங்கு முதல் அரையாண்டு தேவர்களுக்குரியது என்றும் இறுதி அரையாண்டு பிதிர்களுக்கு உரியது என்றும் ஒரு நம்பிக்கை இருக்கிறது.

கற்கடகம் என்பது ஆடித் திங்களின் பழைய தமிழ் பெயராகும். ஆடி முதல் நாளை தமிழர்கள் வரவேற்கும் விழாவே ஆடிப்பிறப்பு. இப் பண்டிகையின் போது தேங்காய் சுடுதல் என்ற உணவுப் பழக்கமும் தமிழர்களிடம் காலம் காலமாக நிலவிவந்துள்ளது. எனினும் இன்று அந்த உணவு நடைமுறையும் அற்றுப்போய் விட்டது.

ஆடிப்பிறப்பை தன் பாடல்களால் ஆவணப்படுத்தியவர், ஈழத்தின் பெரும்புலவர், நவாலியூர் சோமசுந்தரப்புலவர். வேறெந்தப்புலவரும் பாடாத வகையில் ஆடிக்கூழும் கொழுக்கட்டையும் செய்யும் முறை பற்றியே விளக்கி காட்சிப்பாடலை எமக்கு தந்த அவரோ, அன்று, “ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை” என்று பாடினார். ஆனால் இன்று விடுமுறை இல்லை!

ஆடிப்பிறப்புக்கு விடுமுறை வழங்கப்பட்ட செயற்பாடு ஏன் வழக்கொழிந்தது? தற்போது ஆடிப்பிறப்பின் போது கொண்டாட்ட நிகழ்வுகளை பாடசாலைகளிலும், பொதுஇடங்களிலும் வடமாகாண பண்பாட்டு திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. எனினும் ஆடிப்பிறப்பு போன்ற பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க தினங்களை விடுமுறை தினங்களாக்க வேண்டும். வடகிழக்கில் இந்த நடைமுறையைக் கொண்டுவருவதன் மூலம் காயப்பட்ட ஈழ மக்கள், தமது பாரம்பரிய பண்பாட்டு தினங்களை கொண்டாடி உளத்தை மகிழ்ச்சிக்கு உள்ளாக்க முடியும். இந்த விடயத்தைப் பற்றி இன்றைய சைவத்தமிழ் தலைமைகள் சிந்திக்க வேண்டும்!

ஒரு காலத்தில் பெரு விழாவாகக்கொண்டாடப்பட்ட ஆடிப்பிறப்பு இன்று மக்கள் மத்தியில் எவ்விடத்தில் உள்ளது? ஈழத்தமிழர்களுக்கேயுரிய தனித்துவமான பண்டிகையான ஆடிப்பிறப்பு காணாமல் போய்க்கொண்டிருக்கிறது என்று தான் எண்ணத்தோன்றுகின்றது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு என்று தமிழ் பகுதிகளில் கோயில்களின் பூசைகளுடனும், ஓரிரு வீடுகளின் காய்ச்சப்படும் கூழுடனும் முடிந்து போகிறது.

இந்த நிலை மாறி எம் பழைய உணவுப் பண்பாட்டு நடைமுறைகள் மீளெழுச்சி அடையவும், பண்டிகைகள் புத்துயிர் பெறவும் நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டிய காலம் இது!

திருச்சிற்றம்பலம்

## தமிழர் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில் ஆடி மறைமதி (அமாவாசை) இம்முறை ஆடி 19 (ஆக 4)



### தந்தையை இழந்தவர்கள் கண்டிப்பாகப் பிடிக்கவேண்டிய விரதம்.

மயங்காத் தமிழர் மரபிலே தொன்றுதொட்டு மூத்தோர் வழிபாடுகள் மற்றும் நீத்தார் வழிபாடுகள் இரண்டறக்கலந்தவை ஆகும். பொதுவாக ஒவ்வொரு மறைமதி (அமாவாசை) தினங்களும் விரதத்திற்குரிய நாட்களாயினும் தை, ஆடி,மற்றும் புரட்டாதி மறைமதி (அமாவாசை) தினங்கள் தென்புலத்தார் பிதிர் வழிபாட்டிற்கு மிகவும் உகந்தவை ஆகும்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை** - குறள் 43

குறிப்பாக ஆடி மறைமதி அன்று, தந்தையை இழந்தவர்கள் நோன்பிருந்து மனம், மொழி, மெய்களால், வினைகளை அறுத்து வீடுபேறு வழங்கும் ஒரேயொரு கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டு உங்கள் தந்தைக்கும், முன்னோருக்கும் மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கவேண்டுமென்று விண்ணப்பம் வைத்து நெய் விளக்கேற்றி வழிபடவேண்டும். ஏற்கனவே அவர்கள் பிறப்பினை எடுத்திருந்தால் இப்பூவுலகவாழ்வில் வாழ்வாங்கு வாழ்வதற்கு பொருளும், பிணிகள் அற்ற வாழ்வும் பின்னர் அருளும் வழங்கி பிறவிப்பிணியையும் நீக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு** – குறள் 247

இத்தினத்திலே அதிகாலை எழுந்து, புனித தீர்த்தங்களில் அல்லது கிணற்றடி நீரில் ஓம் நமசிவாய என்ற மந்திரத்தினை உச்சரித்தபடி நீராடி, சிவனை வழிபட்டு, மூத்தோரின், தந்தையின் படம் வைத்து , நெய் விளக்கேற்றி அவர்களுக்கு எள்ளும் தண்ணியும் இறைத்து பிதிர் வழிபாடு ஆற்றி, பலவகையான மரக்கறிகளுடன் நிறைவான அறுசுவை உணவுகளை வீட்டில் தாயார் செய்து, சிவனுக்கும் அவர்களுக்கும் படையல் செய்து, சிவபுராணம் பாடி, பிற உயிர்களுக்கும் உணவளித்து, அன்னதானம் இட்டு, நீங்களும் குடும்பமாக இருந்து உணவினை உட்கொண்டு நிறைவு செய்யலாம். நீத்தாருக்கு முத்தி வேண்டி அச்சோப் பதிகத்தினையும் ஓதுங்கள்.

**மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்**

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே**

# செல்வச்சந்நிதியுறை அருள்மிகு சந்நிதியானும் சித்தர்களும்





கலாநிதி சு.குணேஸ்வரன்
ஆசிரியர் -
யா / சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை

(கடந்த திங்கள் தொடர்ச்சி)

### செல்வச்சந்நிதி மடங்கள்

செல்வச்சந்நிதிச் சூழலில் பல மடங்கள் இருந்துள்ளன. இம்மடங்கள் சந்நிதியின் கோயிற்பண்பாட்டில் இரண்டறக் கலந்துள்ளன. (விரிவுக்குப் பார்க்க: ந. அரியரத்தினம், சந்நிதியில் சித்தர்கள், 2018) 1960-70 களில் 40ற்கும் மேற்பட்ட மடங்கள் சந்நிதியில் அன்னதானச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன.

“மடமாவது பெரியோர்கள் இருந்து கொண்டு கல்வியறிவொழுக்கத்தையும் சமயத்தையும் வளர்த்தற்கு உரிய இடமாகும். மடத்திலே செபம், பூசை, தியானம் முதலியவற்றிற்கும் வேதாகமத் திருமுறைகளை வைத்துப் பூசை செய்தற்கும், வேதாகமங்களைப் படித்தல், படிப்பித்தல்களுக்கும் சமையல் போசனை முதலியவற்றிற்கும் பரிசாரர்களும் அதிதிகளும் இருத்தற்கும் வெவ்வேறிடங்கள் விதிப்படி கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.” என்று குறிப்பிடப்படுகிறது.

சத்திரம் என்பதும் மடம் என்பதும் சிறிய வேறுபாடுகளைக் கொண்டனவாக அமைந்துள்ளன. மடம் என்பதிலிருந்து சத்திரம் வேறுபட்டது. “சத்திரமாவது ஞானிகள் துறவிகள் முதலிய பெரியோர்களுக்கும் தொழில் செய்து சீவனஞ் செய்யச் சக்தியில்லாதவர்களாகிய குருடர், முடவர், வியாதியாளர், வயோதிகர், சிறுபிள்ளைகள் என்பவர்களுக்கும் அன்னதானம் நடத்தற்கும் வழிப்போக்கர்கள் தங்குவதற்கும் உரிய இடமாகும்” என்று ஆறுமுகநாவலர் குறிப்பிட்டுள்ளார்.



அறையும் உள்ளே சிவலிங்க வடிவமும் அமைந்த சமாதி வைரமுத்து சுவாமிகளுடையது

இதிலிருந்து தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் அமைந்திருந்த மடங்களில் சில சத்திரங்களாகவும் சில மடங்களாகவும் செயற்பட்டிருக்கின்றன என்பது புலனாகின்றது. தற்போது இயங்குகின்ற மடங்களில் சந்தியான் ஆச்சிரமம் சத்திரமாகவன்றி மடமாகவே செயற்படுகிறது. (விரிவுக்குப் பார்க்க : ஞானச்சுடர்)

“நோய்வாய்ப்பட்டு மடங்களிலே வந்திருக்கும் மக்கள் நாளாந்தம் ‘மாணிக்க கங்கை’ என்னும் தீர்த்தக் குளத்தில் நீரிலே நீராடினால் நோய் குணமாகும் என நம்பினர். தொடர்ந்து ஏழு நாட்கள் தொண்டைமானாற்றிலே முழுகி எழுந்தால் நோய்கள் யாவும் தீரும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்தது. நோயாளர் மடங்களிலே தங்கியிருக்கும்போது அவர்களுக்குத் தேவையான உடல் ஒய்வும் உள ஓய்வும் கிடைக்கக் கூடியதாகவிருந்தது. பார்வையாளர் தொந்தரவின்றிப் படுக்க முடிந்தது. காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் ஆற்றங்கரையானைத் தரிசித்து அவனருள் பெற்றுப் பலர் நோய் குணமாகினர்.” இதுமட்டுமன்றி பல்வேறுவிதமான நேர்த்திக் கடன்களைக் கழிப்பதற்காகவும் மடங்களில் அன்னதானப் பணியினையும் செய்து வந்துள்ளனர்.

அன்னதான நடைமுறை தொடர்ச்சியாக இடம் பெற்று வந்ததற்கு “கருணாகரத் தொண்டைமான் தொண்டைமானாற்றை வணிக நோக்கில் வெட்டினான். தொண்டைமானாற்றுத் துறையிலே பெருந்தொகையான வணிகர்கள் வந்திறங்கிப் போன காரணத்தால் அவர்களுக்கு, முருகனுக்குக் குவியலாகச் சோற்றினைப் படைத்து. பின்னர் பகுத்துக் கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கவேண்டும். இந்நடைமுறைக்கு இவ்வணிகர்களே பொருளுதவியும் செய்திருக்கலாம்.” என்று கருதுவதும் பொருத்தமுடையதாக அமைந்திருக்கிறது. ஏனெனில் தொண்டைமானாற்றுப் பிரதேசம் சோழர்கால அரசியற் பின்புலத்தில் முக்கியத்துவமுடையதாகவும் அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி செட்டிமாரின் பங்களிப்பும் ஆலய வரலாற்றுடன் இணைத்துச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வகையில் பெருமளவு மடங்கள் இயங்கி அன்னதானப் பணி இடம்பெற்றமைக்கு அடியார்களின் நேர்த்திக்கடன் - நம்பிக்கை தொடர்பான பண்பாட்டு அம்சங்கள் மட்டுமன்றி அரசியல் பொருளாதாரக் காரணிகளும் ஆதாரமாக இருந்திருக்கலாம். இதற்கூடாகவே மடங்கள் இயங்கியிருக்கின்ற பின்புலத்தையும் புரிந்து கொள்ளவேண்டும்.

### கரும்பாவெளிப் பிரதேசச் சூழல்

கரும்பாவெளிப் பிரதேசச் சூழல் ஒர் இயற்கை அமைவிடமாக ஆதிகாலத்திலிருந்து நிலவியிருக்கிறது. இப்பிரதேசம் மரபுரிமைச் சின்னங்கள் நிறைந்த இடமாக இன்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது. உடுப்பிட்டியைச் சேர்ந்த குமாரசுவாமி பெண் வீராத்தை வெட்டுவித்த கேணி, ஆவுரோஞ்சிக்கற்கள், குண்டுக் கிணறுகள் அமைந்துள்ளன. இப்பிரதேசம் மக்களின் போக்குவரத்திற்குரிய வண்டிற் பாதையாகப் பயன்பட்டிருக்கிறது என்று பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் கரும்பாவளிக் கேணியில் அமைக்கப்பட்டிருந்த ஆவுரோஞ்சிக் கல்லின் எழுத்தாதாரத்தைக் கொண்டு குறிப்பிட்டுள்ளார். (விரிவுக்குப் பார்க்க: ஆறு, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய நூற்றாண்டுவிழாச் சிறப்புமலர், 2012) நன்னீரேரி, பறவைகள் சரணாலயம், ஆறன் கிணறு, மயானம், ஆநிரைகளின் மேய்ச்சல் தரை, மூலிகைத்தாவரங்கள் முதலானவை உள்ளடங்கியதே கரும்பாவெளி ஆகும். மக்களின் பேச்சுவழக்கில் இப்பிரதேசம் ‘கரும்பாளி’ என அழைக்கப்படுகின்றது. கரம்பைச் செடி அதிகம் இருந்த காரணத்தாலும் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருக்கலாம். செல்வச்சந்நிதி கோவிலுக்குத் தெற்காக நீரேரியை அண்மித்ததாக 15ற்கும் மேற்பட்ட சித்தர்களின் சமாதிகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசம் மூலிகைத் தாவரங்கள் நிறைந்த பிரதேசமாக இருந்தமையும் சித்தர்கள் இங்கு உலாவந்தமைக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இப்பிரதேச மூலிகைத் தாவரங்கள் பற்றி குறிப்பிடும்போது “யாழ் குடாநாட்டில் வேறு எங்கும் பெற முடியாத மூலிகைச் செடிகள் இங்கே காணப்படுகின்றன. இயற்கை மருத்துவம் சார்ந்த ஊர்ப் பெரியவர் ஒருவரின் தகவற்படி மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஔடதமாக அமையும் சுமார் 100 வகையான மூலிகைகளை இங்கு அடையாளம் காட்டமுடியும் எனக் குறிப்பிடுகின்றார். முட்புல்லாந்தி, சிவனார் வேம்பு, எருமை முல்லை, பிரண்டை, ஆவரசு, காரை, துவரை, தூத்துமாங் கொடி, சாத்தாவாரி, குன்றிமணி, பால் அறுகு, குமிழ், நிலப்பருத்தி, நீர்மேல்நெருப்பு, கீழ்க்காய் நெல்லி, புல்லாந்தி, காட்டுப்பலா, நொச்சி, எருக்கலை போன்றன அவற்றுள் சிலவாகும். இவை இப்பகுதிக்குள் காணப்படுகின்றன என்பது வைத்தியர்கள் உட்பட பலரும் அறிந்திராத ஒரு விடயமாகும்.”

### செல்வச்சந்நிதியுடன் தொடர்புடைய சித்தர்கள்

சித்தி என்றால் வெற்றி பெறல், அடைதல் என்று பொருளாகும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு பெரும் சித்துக்களும் பெற்றவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். “சாதாரண மனிதர்கள் சித்தர் கல்வி கற்று, வாசி யோகம் செய்து சித்தி பெற்று அதன்பின் 10 ஆண்டுகள் சிவயோகம் என்ற தசதீட்சை செய்து சித்தி பெற்றுச் சித்தர் ஆகிறார்கள். மனித உடலுடன் மனிதர்களாக வாழ்பவர்கள். மக்களோடு மக்களாக வாழ்பவர்கள் சிலர் குகைகளில் வாழ்பவர்கள். இவர்கள் தமது மூச்சுக் காற்றை அதன் வழியில் இயக்காமல் மூச்சுக் காற்றைத் தமது விருப்பம் போல் இயக்குபவர்கள். இது அவர்களை அடையாளப் படுத்தும். தூய தியானத்தில் சமாதி நிலையில் இருப்பவர்கள். இறைவனுடன் ஒன்றி ஒளி உடம்பு பெற்றவர்கள். இவர்கள் ஒளி வடிவில் தரிசனம் தருபவர்கள்” என்று சித்தர்களாகும் நிலையையும் அவர்கள் எந்த வடிவில் காட்சி கொடுப்பார்கள் என்பதையும் சித்தர் யோகம் சொல்கிறது.

செல்வச்சந்நிதி சித்தர் பரம்பரையில் முதற்சித்தராக ஐராவசு சித்தர் குறிப்பிடப்படுகிறார். சந்நிதியின் தலவிருட்சமாக அமைந்துள்ள பூவரசு மரத்தடியில் அவர் சமாதியடைந்தார் எனவும் கருதப்படுகிறது. ஐராவசு, யானையாக உலாவந்து துன்புறுத்தியபோது சிகண்டி முனிவர் வெற்றிலை நுனியை எறிய அது வேல் போல் யானையைத் தாக்கி ஐராவசுவின் சாபத்தை நீக்கியது. “சிகண்டி முனிவரால் வேல் வடிவிலான வெற்றிலை நுனியினால் மதங்கொண்ட யானையை அடித்து கந்தர்வனை முக்தி அடையச் செய்த வரலாற்றை நினைவு படுத்தும் முகமாகவே இன்றும் எழுந்தருளி வேலின் முகப்பில் வெற்றிலை நுனி வைக்கப்பட்டு வருகின்றது.” என்று ஐராவசு சித்தர் சந்நிதி வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படுகின்றார்.

தொண்டைமானாறு கரும்பாவளிப் பிரதேசம் சித்தர்கள் உலாவிய இடம் என்பதனை ந. அரியரத்தினம் அவர்கள் குறிப்பிடும்போது, “கரம்பாவெளிப் பிரதேசம் செல்வச்சந்நிதி ஆலயத்தின் தெற்குத் திசையில் அதன் எல்லையை அடுத்துள்ள பிரதேசமாகும். இந்தப் பிரதேசம் ஆன்மீக ஈடேற்றத்திற்குத் தம்மை பக்குவப்படுத்துபவர்களுக்கு வேண்டிய மன அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்தக்கூடிய சூழலைக்



அறையும் உள்ளே பீடமும் அமைந்த சமாதிகள்
நாகமுத்து ஐயர் அவரது துணைவியாருடைய சமாதிகள்

கொண்டமைந்துள்ளது. இந்த இயற்கைச் சூழலை எம்மைவிட சிறப்பாகப் பயன்படுத்திப் பயனடைந்தவர்கள் சித்தர்களே. எமது நாட்டைச் சேர்ந்த மயில்வாகனம் சுவாமிகள் மற்றும் கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த ஜேர்மன் சுவாமிகள், பிரித்தானியாவிலிருந்து வந்த ஆனைக்குட்டி சுவாமிகள், புலிக்குட்டி சுவாமிகள், பன்றிக்குட்டி சுவாமிகள் ஆகியோரும் இந்தக் கரம்பாவெளிப் பகுதியில் தனிமையில் உலாவந்து தம்மை தவ வாழ்க்கைக்கு பக்குவப்படுத்தியுள்ளனர். ஜேர்மன் சுவாமிகள், ஆனைக்குட்டி சுவாமிகள் ஆகியோர் இங்கே வந்து மௌனமாகத் தவமிருந்த இடங்களையும் நாம் நன்கு அடையாளம் கண்டு கொள்ளமுடிந்துள்ளது. அத்துடன் வைரமுத்து சுவாமிகள் உட்பட பல சுவாமிகளின் சமாதிகளும் இங்கே உள்ளன.”

சந்நிதியில் சித்தர்கள் என்ற நூலில் செல்வச்சந்நிதியுடன் தொடர்புடைய 30ற்கும் மேற்பட்ட சித்தர்கள் மற்றும் அருளாளர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் மறைந்தவர்கள் மட்டுமன்றி இன்று சந்நிதியில் நடமாடுவோரும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐராவசுச்சித்தர், மருதர் கதிர்காமர், இடைக்காட்டுச் சித்தர், வைரமுத்துச் சுவாமிகள், நடராசா சாமியார் (அடியார் மடம்), அருளாளர் விநாசித்தம்பி, ஜேர்மன் சுவாமிகள், ஆனைக்குட்டிச் சுவாமிகள், நரிக்குட்டிச் சுவாமிகள், பன்றிக்குட்டிச் சுவாமிகள், முருகேசு சுவாமிகள், சடைவரத சுவாமிகள், மயில்வாகனம் சுவாமிகள், சிவயோக சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், செந்தில் சாமியார், கொல்லிமலைச் சித்தர், வைரமுத்துச் சாமி, தம்புசாமி, நடராசா சாமியார் (மணியம் மடம்) தம்பையா சாமியார், புதுக்குடியிருப்பு சுவாமிகள், இணுவில் சாமியார், புங்குடுதீவுச்சுவாமிகள், பாபாச் சாமிகள், கைதடிச் சுவாமிகள், தியாகராசா சாமியார், சின்னத்தம்பி சாமிகள், மௌனகுரு சுவாமிகள், மலர் அம்மா, அருளாளர் குமாரசாமி ஐயர் ஆகியோரை சந்நிதிச் சூழலுடன் தொடர்புபடுத்தி ந. அரியரத்தினம் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

### சைவசித்தாந்த நூல்கள்

**மெய்கண்ட சாத்திர நூல்கள் எப்பொழுது எழுதப்பட்டன?**

மெய்கண்ட சாத்திர நூல்கள்சைவ ஞானிகளால் 12-ம் நூற்றாண்டுக்கும் 14-ம் நூற்றாண்டுக்கும் இடையில் எழுதப்பட்டவை.

**சைவ சித்தாந்தத் துறையில் மெய்க்கண்ட தேவரின் இடமென்ன? சந்தான குரவர் யார்?**

சைவசித்தாந்தத் துறையில் அதி உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் மெய்க்கண்டார். சந்தான குரவர் என்னும் சைவஞானிகள் பரம்பரையின் முதற்குரவர் இவர். தமிழர்கள் பின்பற்றும் சைவ சமயம் சித்தாந்த சைவம் எனப்படும். இது மெய்க்கண்டார் வழியில் அமைந்த சைவத் துறையாகும்.

சந்தான குரவரில் இரண்டாவதாக நிற்பவர் மெய்கண்டாரின் மாணாக்கரான அருணந்தி சிவாசாரியர். இவரின் மாணாக்கர் மறைஞானசம்பந்தர். அவரின் மாணாக்கர் உமாவதி சிவாசாரியார். இந்நால்வரும் சைவ சமயத்தில் சந்தான குரவர் எனப்படுவர்.

**சந்தான குரவர், சமய குரவர் ஆகியோருக் கிடையிலுள்ள வேறுபாடு என்ன?**

சந்தான குரவர் குரு சீடன் முறையில் ஒருவர் பின் ஒருவராக, சந்தானமாக வந்தவர்கள். சமய குரவர் இந்த முறையில் வந்தவர்களல்ல. குரு சீடன் உறவு அவர்களுக் கிடையில் இல்லை.


**மெண்கண்டாருக்குமுன் குரு சீட பரம்பரை இருந்ததில்லையா?**

மெய்கண்டாரின் குருவாக அமைந்தவர் பரஞ்சோதி முனிவர். அவரின் குரு சத்தியஞானதர்சினி. அவரின் குரு சனற்குமாரர். அவரின் குரு திருநந்தி தேவர். இந்நால்வரும் கைலாசத்தில் இருப்பவர்கள். இவர்கள் அகச்சந்தான குரவர் எனப்படுவர். மெய்க்கண்டார், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோர் புறச்சந்தான குரவர். இந்நால்வரும் பொதுவாக சந்தான குரவர் என்று அழைக்கப்படுவர்.

மேற்குறிப்பிட்ட குரவர்களுக்கு ஆதி குருவாகச் சிவ பெருமானே தட்சணாமூர்த்தி வடிவில் நின்று சிவஞான விளக்கம் (சிவஞானபோதம்) அருளினார். இதனால் அவரே சிவஞானபோதம் அருளிய முதற்குரு என்று கொள்ளப் படுகிறது. (சிவஞான போதம் - சிவஞானம் பற்றிய அறிவு).

கைலாயத்திலிருக்கும் பரஞ்சோதி முனிவர் பூமியில் வாழ்ந்த மெய்கண்டாருக்குக் குருவாக அமைந்தது எங்ஙனம்?

பரஞ்சோதி முனிவர் வடக்கே சைலாசத்திலிருந்து தெற்கே பொதிகையை நோக்கி வான்வழிப் போகும் பொழுது, மண்ணில் வாழ்ந்த சுவேதவனப்பெருமாளின் (மெய்கண்டாரின் இயற்பெயர்) பக்குவநிலையை உணர்ந்து அவருக்கு ஞானஉபதேசம் செய்தார். இதனால் அவர் குருவாக அமைந்தார்.



**சிவஞானபோதம் நூலின் முக்கியத்துவம் என்ன?**

சைவ சித்தாந்த தத்துவத்துவத்தின் முதன்மை நூலாக மெய்கண்டாரால் எழுதப்பட்டது சிவஞான போதம். (primary text) இது கொள்ளப்படுகிறது. தர்க்க முறையில் சிறந்து விளங்கி சைவசமய தத்துவத்தைத் திறம்பட விளக்கும் நூல் இது. மேற்குலகின் அறிஞரான ஜோன் பயற் என்பவர் உலகில் தர்க்கமுறையில் அமைந்த மிகச் சிறந்த தத்துவ நூல் இது என்று போற்றுகிறார். (One of the most closely reasoned religious philosophies found anywhere in the world'. - John H. Piet)

சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட மிகச் சிறிய நூல். ஆனால் இதற்கு உரை நூல்கள் பல உண்டு. மிகவும் பெரிய விரிவான உரைநூல் சிவஞான முனிவர் எழுதிய சிவஞான மாபாடியம்.

திருச்சிற்றம்பலம்

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை**
**(கலாநிதி க.கணேசலிங்கம்)**

# நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்

### நாவலரின் சித்தாந்தக் கல்வி

பார்சிவல் துரைமகனாரின் சமயத் தொண்டு நாவலரையும் தொண்டுணர்ச்சி பெறத் தூண்டிற்று. அவ்வுணர்ச்சியால் உந்தப் பெற்ற அவர் சித்தாந்த சாத்திரங்களை விரைந்து கற்க விழைந்தார். ஆசிரியர்கள் துணையின்றியே அனைத்தையும் நுணுகிப் படித்து முடித்தார் என அறிகின்றோம். இன்றும் எத்தனையோஅறிஞர்கள் சித்தாந்த சாத்திரங்களனைத்தையும் கற்றிருக்கின்றார்கள். ஐயந்திரிபின்றிக் கற்றவர் விரல் விட்டு எண்ணத் தகும் சிலரே. அவர்களும் நல்லாசிரியர் பலரின் துணை நாடி ஆண்டுக் கணக்காகப் பாடம் கேட்டவரேயாவர். அவரும் சித்தாந்த சாத்திரங்களை மட்டுமே கற்றவராயிருப்பர். அல்லாவிட்டால், இலக்கண இலக்கியங்களை மட்டுமே கற்ற புலவராயிருப்பர். ஆனால், நம் நாவலரவர்களோ எந்த ஆசிரியரையும் நாடாது சில திங்களில் தாமே கற்றுப் புலமை எய்தினார் என்றறிகிறோம்.

இலக்கண இலக்கியங்களும் சித்தாந்த சாத்திரங்களும் கற்ற அவர் அவற்றோடு அமைந்தாரா? இறைவனால் அருளிச் செய்யப்பட்ட ஆகமங்களையும் கற்க விழைந்தார். அவ்வாகமங்களுள் வேதம் பொது நூலாகவும், சிவாகமம் சிறப்பு நூலாகவும் விளங்குதலை அறிந்தார். சிவ சமயம் ஒன்றற்கேயுரிய சிவாகமத்தைப் படிப்பதற்குரிய முயற்சியில் ஈடுபட்டார். அவ்வாகமத்தைப் பயில்வதற்கு வடமொழிப் புலமை இன்றியமையாது வேண்டுவதாயிற்று. ஆகவே, வடமொழி நூல்களைப் பிறருதவியின்றிப் படித்து வருவாராயினர்.

இயற்கையறிவு சிறக்கப்பெற்ற அவருக்கு வடமொழிப் புலமையும் தானே அமைவதாயிற்று. அவர் வடமொழியைத் தாமே கற்றதற்கு ஒரு காரணம் உண்டு. இந்தக் காலத்தைப் போன்று எவரும் எம் மொழியையும் விரும்பினால் கற்க முடியும் என்ற உரிமை அக்காலத்தில் இல்லை. ஒருவர் பயில விரும்பினும் பயிற்றுவிக்கும் ஆசிரியர் விரும்பவில்லையானால் அவ்விருப்பம் நிறைவுறாது. இடைக்காலத்தே வாழ்ந்த வடமொழி தென்மொழிக்கடல்களை நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான அடிகளார் இளமை வரலாற்றின் நிகழ்ச்சியினை யிண்டு அறிய வேண்டுவதேயாம். பிறவியிலேயே மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றவர் சிவஞான முனிவர். அவர் திருவாவடுதுறை யாதீனத்திலே தமிழ்க் குன்றாக வீற்றிருந்தார்.

வடமொழிபடித்துணர வேண்டுமெனும் அவா மிக்கிருந்தது. தொண்டை நாட்டு வள்ளல் மணலி சின்னையா முதலியாரிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். முதலியாரவர்கள் முனிவர்தம் அவாவினைத் தாம் அறிந்த வட மொழிவாணர்களிடம் அறிவித்தார். அவர்கள் கற்பிக்க மாட்டோம் என்று வெளிப் படையாகச் சொல்லவியலாதவர்களாய் ஏதோ காரணங்களைக் கூறினர். முதலியாரவர்கள் முனிவரின் அவாவினை மேலும் வற்புறுத்தித் திருவருள் குறிப்பித்தால் தாங்கள் கற்பிக்கலா மன்றோ என வினவினார். திருவருட் குறிப்பு என்றதும் மறுக்கவியலாது இசைந்தனர். அவ்வடமொழி வாணர்கள் விருப்பின்படி ஒரு குடத்தில் நூற்றொரு சீட்டு எழுதி இட்டனர். 'கற்பித்தல் கூடாது' என்று நூறு சீட்டும், 'கற்பித்தல் கூடும்' என்று ஒரு சீட்டும் எழுதியிருந்தனர். குடத்தினைக் குலுங்கித் திருவுளச் சீட்டை எடுத்தனர் ! 'கற்பித்தல் கூடும்' என்ற ஒரே சீட்டு வந்தது!

வடமொழியைப் பெரும்பாலான மக்கள் பயிலாமைக்கும், உலக வழக்கு இழந்தமைக்கும் இதுவும் ஒரு காரணமாகும். பிறிதொரு காரணமும் உண்டென்பர். வேதாகமங்களைப் பெரிதும் போற்றி யொழுகுபவர் தென்புலத்தினர். தென்புலத்தவர் சித்தாந்த சாத்திரங்களுடன் சிவாகமங்களும் கற்றுவிட்டால் சிவநெறியினையே மக்கள் போற்றுவர் பிறநெறி குன்றுதற் கேதுவாகும் என்பதுவுமாம். இதனை நாவலரவர்கள் நன்குணர்ந்தே சிறப்புத் தன்மையுடைய சிவாகமங்களைப் பயிலப் போந்தனர். சிவாகமங்களின் தெளிந்த சாரமே நால்வர் அருளிய தேவாரத் திருவாசகங்கள் என்பதை உணர்ந்தார். அவற்றின் செழும் பாடல்களையும் அன்போடுருகி அகங்குழைந்து பயில்வராயினர். அஞ்சல் என்றருள் செய்யும் ஆண்டவனைப் போற்றி வழிபட வேதத்தினும் சிறந்தது சிவாகமமே என்ற கருத்துடையவர் நாவலர். இக்கருத்து சிவநேசச் செல்வர் சிவப்பிரகாச அடிகளாருக்கும் உரியது. "தமிழ்ப் பாட்டுக் குருகும் சொக்கநாதன்" என்ற பொருள் பொதிந்த சொற்றொடரும் ஈண்டு நினைந்து இன்புறத் தக்கதாகும்.



சிவ.யதோட்சயன்
மங்களேஸ்வரன்
தரம் 11,
யாழ். மத்திய கல்லூரி

இவ்வாறு மும்மொழிப் புலமையும் செம்மையாகப் பெற்று யாவரும் வியக்கும் வண்ணம் நாவலர் சிறப்படைந்தார். தம்பால் வருவாரிடத்துப் பன்னூல் கருத்துக்களையும் அள்ளி அள்ளி வீசி முப்பொருளுண்மையைச் செப்பமுறக் காட்டுவர். கேட்டார் மயிர் சிலிர்த்து, "இவரே நம் ஐந்தாங் குரவர்" என அடி பணிந்து ஏத்துவர். அவரைக் கண்டாலே இம்மைப் பிறப்பின் பயன் என எண்ணினர். தமக்குத் தெரியாதென்று பிறரிடம் சென்று ஒன்றையுங் கேட்டறியாத நாவலர்பால் எண்ணிறந்த புலவர்கள் வந்து தங்கள் ஐயம் நீங்கித் தெளிவு பெற்றனர். இளைஞராயிருந்த போதே இந்தியாவிலும் இவருடைய பெருமை நிலவிற்றெனில் இவரை, 'ஐந்தாங் குரவர்' என்று புகழ்தலில் தவறுமுளதோ?

திருச்சிற்றம்பலம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்



**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

## திருஞானசம்பந்தருடன் மூன்றாவது சந்திப்பு

திருவையாற்றில் தங்கியிருந்த அப்பர் பெருமான் சிலகாலம் கழித்து, திருவையாற்றிலிருந்து விடை பெற்று, திருநெய்த்தானம் முதலாக அருகில் உள்ள பதிகளை எல்லாம் வணங்கித், திருமழபாடிக்குச் சென்று இறைவரை வணங்கிச் செந்தமிழ் மாலையாகிய திருப்பதிகம் பாடித் திருப்பணிகளையும் செய்து போற்றி, பின்பு திருப்பூந்துருத்தியை அடைந்தார்.

அத்திருப்பதியில், சிலகாலம் தங்கியிருக்க வேண்டும் என எண்ணி, அங்கு ஓர் திருமடத்தை அமைத்து திருப்பணி புரிந்து வந்தார். அக்காலத்தில் பலவகை பதிகங்களை அருளி மகிழ்ந்தார். அவ்வாறு வாழ்ந்த காலத்தில், சமணர்களை வாதில் வென்று, அவர்களின் பொய்ம்மையான சூழ்ச்சிகளை அழித்துப், பாண்டியனின் கூனை நிமிர்த்தி, அருளுரை வழங்கி, திருநீற்றின் விளக்கம் ஓங்கச் செய்து, நிலையான சிறப்புக் கொண்ட சீகாழியில் தோன்றியருளிய மறையவரான திருஞானசம்பந்தர் அருகில் இருக்கும் செய்தி அறிந்து, அவரை காணும் பொருட்டு உடனே புறப்பட்டார்.

சீகாழியின் தலைவரான ஞானசம்பந்தர் வருகின்ற அதுபொழுது, திருக்கூட்டத்துடன் கூடிச்சேர்ந்து எவரும் அறியாதவாறு, மறைத்த வடிவுடன், சீகாழி அந்தணரான ஞானசம்பந்தர் எழுந்தருளிவரும் அழகான மணிச் சிவிகையைச் சுமப்பவர்களுடன் தாமும் ஒருவராய்த் தாங்கிச் சென்றார். சம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் வீற்றிருந்த திருப்பூந் துருத்திக்கு அருகில் எழுந்தருளிச் சிவிகையில் இருந்தவாறே "அப்பர் எங்குற்றார்?" என்று வினவ, உள்ளம் மிகவுருகி, "உம் அடியவன் உம் திருவடிகளைச் சுமக்கும் பெருவாழ்வு பெற்று இங்கு இருக்கின்றேன்" என்று சிவிகையைத் தாங்கி வரும் அந் நிலையிலேயே விடை பகர்ந்தார்.

இதைக்கேட்ட சம்பந்தர் பதைபதைத்து சிவிகையிலிருந்து கீழே இறங்கி, அப்பர் பெருமானை வணங்க, திருநாவுக்கரசரும் அவர் வணங்குவதற்கு முன்னம் தாம் அவரை வணங்க, சூழ்ந்திருந்த அடியார் திருக்கூட்டத்தினர் அனைவரும் இருவரையும் ஒருசேர 'அரோகரா' என ஒலி எழுப்பி வணங்கினர். இந்நிகழ்வை சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பரவிச் செல்கிறார்.

**பிள்ளையார் அதுகேளாப்**
**பெருகுவிரை வுடன்இழிந்தே**
**உள்ளமிகு பதைப்பெய்தி**
**உடையஅர சினைவணங்க**
**வள்ளலார் வாகீசர்**
**அவர்வணங்கா முன்வணங்கத்**
**துள்ளுமான் மறிக்கரத்தார்**
**தொண்டரெலாந் தொழுதார்த்தார்.**

பின்னர் சம்பந்தர் பெருமான் அப்பருடன் இணைந்து, திருப்பூந்துருத்தி இறைவனை வணங்கி அப்பருடன் எழுந்தருளியிருந்தார். கொடிய சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டியனிடத்தில் முன்பு பொருந்தி இருந்த கூனை நிமிர்த்தியமையையும், தண்ணிய வைகை ஆற்றின் நீர் பாயும் பாண்டிய நாட்டில் அளவில்லாத சிறப்புடைய திருநீற்றின் நெறியைப் பெருகச் செய்ததையும், மங்கையர்க்கரசியாரின் அன்பின் திறத்தையும், அடியவரிடத்துப் பெருநட்புக் கொண்டுவாழும் குலச்சிறையாரின் பெருமையையும் ஞானசம்பந்தர் எடுத்துக் கூற அப்பரும் ஆர்வமாக கேட்டு மகிழ்ந்தார்.

சம்பந்தர் கூறியதை கேட்ட அப்பர் பெருமான் பாண்டிய நாடு செல்ல விருப்பங்கொண்டு, சம்பந்தரிடன் விடைபெற்றுக்கொண்டு, திருப்பூருந்தியில் இருந்து நீங்கி திருவாலவாயினை அடைந்தார். இவ்வாறு சென்று சேர்ந்த திருநாவுக்கரசர் மதுரை நகரத்துள் சென்று, திருத்தகு நூல்களில் வல்லுநர்களான புலவர் பெருமக்கள் கூடிய சங்கத்தினுள், முன் நாளில் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்தருளிய இறைவரின் திருக்கோயிலின் திருமுற்றத்தை வலமாகச் சூழ்ந்து, வெளியே திருமுன்பு விழுந்து வணங்கிக் கோயிலுக்குள் புகுந்து, சொக்கநாதப் பெருமானை வணங்கி மகிழ்ந்தார். அங்ஙனம் உள மகிந்து,

**முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி**
**முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்**
**வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்**
**வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்**
**துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்**
**தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்**
**திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்**
**சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே**

எனும் பதிகத்தை அருளிச் செய்தார். அப்பர் ஆலவாயில் எழுந்தருளியிருப்பதை அறிந்து, மங்கையர்கரசியாருடன் திருநீற்றின் சார்பு அடைந்ததால் கூன் நிமிரப் பெற்ற நின்றசீர் நெடுமாறனார் என்னும் இவர்களுடனே, உலகம் போற்றும் குலச் சிறையாரும் வந்து வணங்கி மகிழ்ந்தனர்.

சிலகாலம் கழித்து, ஆலவாயிலிருந்து நீங்கி, சிவபெருமானின் திருப்பூவணத்தை அடைந்தார். திருப்பூவணத்தின் கோயிலுள், திருமாலுக்கும் அரியவரான சிவபெருமான் வெளிப்பட்டருளக் கண்டு வணங்கி,

**வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்**
**வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்**
**கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்**
**காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்**
**இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்**
**எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்**
**பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்**
**பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே**

எனும் திருத்தாண்டகப் பதிகத்தால் போற்றி செய்து, அங்கிருந்து நீங்கி, இராமன் வழிபட்ட திருத்தலமான இராமேசுவரத்திற்கு சென்று வழிபாடு ஆற்றி மகிழ்ந்தார்.

**"வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்"** (தி.6 ப.18) எனத் தொடங்கும் இப்பதிகத்தில், பூவணத்தின் புனிதனாரைத் தாம் கண்டவாறு போற்றி மகிழ்கின்றார் நாவரசர். அவற்றுள் **"பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்"** என வருவதைப், **"பொடிநீடு புனிதர்"** என இப்பாடற்கண் வைத்து நினைவு கூருகின்றார் சேக்கிழார் பெருமான்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (385 - 410)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அணிகொண்ட கோதையம்மை உடனுறை முல்லைவன நாதர் - தென் திருமுல்லைவாசல்

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 7ஆவது திருக்கோயில் தென் திருமுல்லைவாசல்



**"செஞ்சாலி நெல்லின் வளர் சோறளிக்கொள்**
**திருமுல்லை வாயிலிதுவே"**

கரிகால் சோழனின் பாட்டனார் முதலாம் கிள்ளி வளவன் வழிபட்டு பிணி நீக்கிய அற்புதத் தலமே திருமுல்லைவாசல் அருள்மிகு அணிகொண்ட கோதையம்மை உடனுறை முல்லைவன நாதர் திருக்கோயில். இது தென் திருமுல்லைவாசல் என்றும் வழங்கப்பெறுகின்றது.

**அமைவிடம்:** மயிலாடுதுறை, தமிழ்நாடு.

சீர்காழிக்குக் கிழக்கே 13 கி.மீ. தூரத்தில் உள்ளது. சீர்காழியிலிருந்து பேருந்து வசதி இருக்கிறது.

**இறைவர் திருப்பெயர்:** முல்லைவனநாதர், மாசிலாமணீசர்
**இறைவியார் திருப்பெயர்:** அணிகொண்ட கோதையம்மை
**கோயில் மரம்:** முல்லை
**தீர்த்தம்:** பிரம்ம தீர்த்தம் , சந்திர தீர்த்தம்
**வழிபட்டோர்:** உமையம்மை, சம்பந்தர், அப்பர், சேக்கிழார், இந்திரன், கார்கோடகன் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர், அப்பர், சேக்கிழார்

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன் நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்பர் உலகங் கடந்த உமைபங்கன் எங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த கமலங்கள் தங்கு மதுவிற்
தெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடு திருமுல்லை வாயி லிதுவே.
(2-88)

### அப்பர் பெருமானின் பதிகக் குறிப்பு

கடுவாயர் தமைநீக்கி யென்னை யாட்கொள்
கண்ணுதலோன்நண்ணுமிடம்அண்ணல்வாயில்
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்
மடுவார்தென் மதுரைநக ரால வாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாட நீடு
குடவாயில் குணவாயி லான வெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடா வன்றே.
(06-71-07)

### சேக்கிழார் பதிகக் குறிப்பு

அருமையாற் புறம்பு போந்து
வணங்கிஅங் கமரும் நாளில்
திருமுல்லை வாயில் எய்திச்
செழுந்தமிழ் மாலை சாத்தி
மருவிய பதிகள் மற்றும்
வணங்குவார் மறையோர் ஏத்தத்
தருமலி புகலி வந்து
ஞானசம் பந்தர் சார்ந்தார். (12-28-127)


### திருத்தலச் சிறப்பு

இது சம்பந்தர் தேவாரத் திருத்தலமாகும். இதன் தலமரம் முல்லையாதலால் முல்லைவாசல் என பெயர் பெற்றது. (சென்னை நகரத்தில் வட திருமுல்லைவாயில் என்ற மற்றொருத் தேவாரத் தலம் உள்ளது) திருவைந்தெழுத்து மந்திரம் பற்றி அறிந்து கொள்ள இங்குள்ள இறைவனை, இறைவி வழிபட்டதால் சிவபெருமான் குருவாக இருந்து அம்மைக்கு உபதேசித்தார். இறைவன் குருவாக இருப்பதால் இங்கு பள்ளியறை கிடையாது. கார்கோடகனும் சுதர்மனும் வழிபட்ட தலம். சோழ மன்னனின் பாவம் நீங்கிய தலமென்பது தொன்நம்பிக்கை.

இங்கு மூன்றரை அடி உயரமுள்ள தான்தோன்றி இலிங்கம் காணப்படுகின்றது. இங்குள்ள இலிங்கம் வாளால் வெட்டுப்பட்ட காயத்தழும்புடன் காணப்படுகின்றது. இக்கோயில் கடற்கரைக் கோயிலாகும். சிந்தனை விநாயகர் சந்நிதி சிறப்பானது. இது, கோயிலுக்கும் கடற்கரைக்கும் இடையிலுள்ளது. வடக்கே நந்தகோபால தீர்த்தம் என்ற குளம் இருக்கிறது.

### திருத்தல வரலாறு

கரிகால் சோழனின் பாட்டனார் முதலாம் கிள்ளி வளவன் தோல் நோயால் மிகவும் வேதனைப் பட்டான். நோய் தீர வேண்டுமானால் சிவத்தலம் ஒன்றில் உள்ள தீர்த்தத்தில் நீராட வேண்டுமென அரண்மனை வைத்தியர்கள் கூறினர். நோய் தீர தன் பரிவாரங்களுடன் இத்தலத்தின் அருகில் உள்ள கடலில் நீராட வந்தான். அப்போது இந்த பகுதி முழுவதும் முல்லை கொடிகளாக இருந்தது. எனவே இவர்கள் வந்த குதிரையின் குளம்பு முல்லை





கொடிகளில் சிக்கிக் கொண்டது. அதற்கு மேல் குதிரைகளால் நகர முடியவில்லை.

முல்லைக் கொடிகளை கிள்ளிவளவன் வாளால் வெட்டும் போது, அதன் கீழேயிருந்த தான்தோன்றி சிவலிங்கத்தின் மீது பட்டு இரத்தம் பெருகியது. அதிர்ச்சியடைந்த கிள்ளிவளவன், ஏதோ ஒரு உயிரை வெட்டி விட்டோமே என பார்க்க, அங்கே இலிங்கம் ஒன்று இரத்தம் வழிய காட்சியளித்தது. தெரியாமல் மாபெரும் தவறு செய்து விட்டோமே என வருந்திய மன்னன், தன்னைத்தானே வெட்ட முற்பட்டான். உடனே எம்பெருமான் அம்மையப் பராக இடபத்தில் காட்சி தந்து கிள்ளிவளவனை காப்பாற்றினார். எனவே தான் இத்தலத்திற்கு திருமுல்லை வாசல் என்று பெயர் வந்தது. இலிங்கத் தில் வாளால் வெட்டுப்பட்ட காயத்தழும்பை இன்றும் காணலாம்.

### திருக்கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கிய சந்நிதி. இராசகோபுரமில்லை. பக்கத்தில் குளம் உள்ளது. வெளிச்சுற்றில் உள்ள கிளுவைப் பத்திர மரத்தில் தலமரமான முல்லைக்கொடி சுற்றியவாறு படர்ந்துள்ளது. கற்பக விநாயகர், திருமால், சேத்திரலிங்கம், பாலசுப்பிரமணியர், இலக்குமி முதலிய சந்நிதிகள் உள்ளன. அம்பாள் - அழகான திருமேனி. அடுத்து ஒன்பான்கோள் (நவக்கிரகம்) சந்நிதி. முல்லை வனநாதர் சந்நிதி - நேரே மூலவர். மூர்த்தி சுயம்புத் திருமேனி.

நாடொறும் நான்கு கால வழிபாடுகள்



நடைபெறும் இக் கோயிலில் பெருவிழா மாசி மகத்தன்று ஒருநாள் திருவிழாவாக நடைபெறுகிறது. தைப்பூச நாளில் நூற்றெட்டு காவடிகள் எடுப்பது இங்கு விசேடமானது. பக்கத்தில் குருகாவூர் தலம் உள்ளது.

நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன்
அனலாடு மேனியரனூர்
மஞ்சாரு மாட மனைதோறு மைய
முளதென்றுவைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர் சோறளிக்கொள்
திருமுல்லை வாயிலிதுவே - சம்பந்தர் 2-88-7

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 18ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட வல்வெட்டித்துறை சிவன் கோயில்

இலங்கையில் வடகிழக்குக் கரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சைவப்பண்பாடு செழித்து விளங்கும் வல்வெட்டித்துறையில் இராசிந்தன் கலட்டி எனுமிடத்தில் உறைந்திருக்கும் சிவன் கோயில் இதுவாகும். இக்கோயில் வல்வெட்டித்துறை காங்கேசன்துறை சாலையில் வல்வைச் சந்தியிலிருந்து 300 யார் தொலைவில் அமைந்துள்ளது.

### திருத்தலச் சிறப்பு

08-03-1921 இல் 4889 இலக்கம் கொண்ட கோயிலின் அறங்காவலர் நியமிப்புச் சாசனத்தில் இங்கு எழுந்து அருளியுள்ள சுவாமியின் திருநாமம் வைத்தீசுவரர் என்றும் அம்பிகையின் பெயர் தையல் நாயகி என்றும் வரையப்பெற்றுள்ளது. 1883 ஆம் வருடத்தில் வல்வை வைத்திலிங்கம் பிள்ளை அவர்கள் பாடிய ஊஞ்சல் பதிகத்திலும் அம்மையின் பெயர் தையல் நாயகி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது வாலாம்பிகை என்று பெயரிட்டு போற்றுவதை அவதானிக்க முடிகின்றது. கோயிலின் உள்ளே அமைந்துள்ள திருத்தடாகமும், திருவாதிரை, பங்குனி உத்தரத்தில் தீர்த்தமாடும் ஊறணி சமுத்திரமும் புனிதம் வாய்க்கப் பெற்ற தலத்தீர்தமாகக் கொள்ளப்படுகின்றது.

### திருத்தல வரலாறு

வல்வையில் சிவன் கோயில் உற்பத்தியாகியமை தொடர்பாக இப்பிரதேசத்தில் கர்ண பரம்பரைக் கதையும் நிலவி வருகின்றது. வெங்காடசலம் பிள்ளையவர்கள் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு தலைவராக இருக்கும் போது கம்பர் மலையைச் சார்ந்த நண்பனுடன் உலா வருவது வழக்கம்.

அவ்வாறு வரும் நாளில் ஒரு நாள் அம்மன் கோயில் பக்கமாக தெற்கு நோக்கி வரும் போது நெருப்பு எரிவது போன்று ஒரு ஒளி காணப்பட்ட தாகவும், அங்கு சென்று பார்த்த போது மாட்டுச் சாணம் மட்டும்தான் அவ்விடத்திற் காணப்பட்டதாகவும் மறுநாள் இவரின் தந்தையாரான திருமேனியார் கனவில் தோன்றி அவ்விடத்தில் சிவனுக்கு திருக்கோயில் எடுக்கும் படி பணிந்தார் எனவும் கூறப்படுகிறது.

விஸ்வநாதப் பிள்ளை அவர்கள் காசியிலிருந்து பாணலிங்கத்தையும், மற்றும் நடராசர், சந்திரசேகரர் ஆகிய தெய்வச் சிலைகளையும் கொடுத்து, குடமுழுக்கும் செய்து, ஆறு காலப்பூசை பண்ணுவதிற்கும் முதன் முதலில் ஏற்பாடு செய்தார். இக் கோயிலுக்கு முதன்முறையாக புலோலியைச் சேர்ந்த சண்முக நாதக் குருக்கள் பூசைகளைப் புரிந்து வந்தார். இக்கோயிலின் திருவிழாக்களை அவ்வூர் சார்ந்த, சாராத பொதுமக்களும் செய்து வந்தனர். குறிப்பாக வே. வைரமுத்துப்பிள்ளை என்னும் வர்த்தகர் கோயிலுக்குத் தேவையான மகமைப் பொருட்களை தானமாக வழங்கி வந்தார்.

அத்துடன் மட்டக்களப்பில் நெல்லுக்கிள்ளலாகிய ஏற்பாட்டைத் தானே உண்டு பண்ணி, அதில் கிடைக்கும் வருவாயை கோயிலுக்கு வழங்கி வந்துள்ளார். நெல்லுக்கிள்ளும் ஏற்பாட்டைத் தவிர பிடி அரிசிகிள்ளுதல், உண்டிகைப் பெட்டி, மகமை, வியாபார மகமை, கூலி மகமை, சம்பள மகமை ஆகியவற்றையும் புரிந்து



வந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க பிரமுகர்களில் வல்வை ஐயம்பிள்ளை வேலாயுதம் என்பவரும் ஒருவர் இவரது மகன் திருமேனியர். இவரது புதல்வரான பெரிய தம்பியார் அல்லது பெரியவர் என அழைக்கப்படும் வெங்கடாசலம் பிள்ளை என்பவரே இக்கோயிலை உருவாக்கியவர் ஆவர். கடலில் மூழ்கிய அத்திலாந்திக் கிங் என்னும் கப்பலை மூழ்கிய நிலையிலேயே அதனை விலை கொடுத்து வாங்கி அதனை மீட்டெடுத்து வேண்டிய திருத்தங்களைச் செய்து அதன் மூலம் கடல் வணிகம் செய்து கிடைத்த வருமானத்தில் ஒரு பகுதியைக் கொண்டு இக் கோயிலைக் கட்டினார். இதற்காக இந்தியாவில் இருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு, கோயில் கட்டுமான வேலைகளைச் திறம்படச் செய்து, 08-06-1883 அன்று திருக்குட நன்னீராட்டு பெருவிழாவும் செய்விக்கப்பட்டது.

### கோயில் திருப்பணிகள்

கோயிலை உருவாக்கிய வெங்கடாசலம் பிள்ளை அவர்களும், அவருடைய சகோதரர்கள், வல்வெட்டியூரைச் சேர்ந்த வணிகர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள், அயலுரைச் சேர்ந்தவர்களும் இத்திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் புரிந்துள்ளனர்.

வட்டுக்கோட்டை சித்தங்கேணியைச் சேர்ந்த காசிநாதர் வயித்திலிங்கம் என்பவர் 1901 ஆம் ஆண்டு கருங்கல்லைக் கொண்டு வசந்த மண்டபத்தினைக் கட்டிக் கொடுத்தார். 1912 ஆம் ஆண்டு இந்தியாவைச் சோந்த தெலுங்கு தேச வச்சிகரான காரஞ்சேடு ஏர்லக்கட்டர் அரங்க நாயுடுகாரு என்பவர் முன்வாயில் மண்டபத்தையும், கோபுர அடிப்பாதையும் அமைத்தக் கொடுத்தார். வல்லைப் பிரபுவாகிய விஸ்வநாதர் சரவண முத்தப் பிள்ளை என்பவர் நடராசர் மண்டபத்தையும், கோயில் பெருவீதிக்கும் தனது நிலத்தின் பெரும் பகுதியை தானமாகக் கையளித்தார். 1923 தொடக்கம் 1956 வரை சபாரெத்தினம் அவர்கள் கோயிலை பொறுப்பேற்ற காலகட்டங்களில் இராசகோபுரம், தேவிவாசல் மண்டபம், மணிக்கோபுரம் என்பன கட்டப்பட்டன. 1970 இல் இரண்டாம் வீதியின் வசந்த மண்டபத்தின் தென்பகுதி புதுப்பிக்கப்பட்டதோடு 1977 இல் திரு மா.குமார சுவாமி அவர்களால் எழுந்தருளல் திருமேனி செய்விக்கப்பட்டு தைப்பூசமன்று திருநிலைப்படுத்தல் செய்யப்பட்டது. இக்காலத்தில் சித்திரத்தேர் ஒன்றும் இடபவாகனம் ஒன்றும் செய்விக்கப்பட்டது



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

யுத்த காலத்தில் இக்கோயில் பலத்த சேதங்களுக்கு முகம் கொடுத்திருந்தது, இருப்பினும் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு 04-02-2004 அன்று திருக்குட நன்னீராட்டு பெருவிழாவும் செய்விக்கப்பட்டு, வழமை போற் திருவிழாக்களும் நாள் பூசைகளும் இடம்பெற்று வரலாகியது.

### பூசைகளும் விழாக்களும்

இச் சிவன் கோயிலில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகளும் இடம்பெற்று வருவது சிறப்பாகும். இக்




கோயிலில் தைப்பூசத் திருவிழா, மாசிமக திருமஞ்சனம், ஆவணி மூல திருவிழா, கதிரவன் உச்சம் பெறும் புண்ணிய கால தீர்த்தத் திருவிழா, சோமவார திருவிழா, பள்ளியறை மணவாளக் கோல ஆனி உத்தரம், சதுர்த்தி திருவிழா, கார்த்திகைத் திருவிழா என்பன சிறப்பாக வருடம்தோறும் நடை பெற்றுவருகின்றன. மற்றும் சிவனிரவு, திருவாதிரை ஆகிய சிவவிரதக் காலங்களில் விசேடபூசை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன. நாயன்மார்களின் குருபூசைகளும், தேவி பெருந்திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. வருடந்தோறும் புராணப்படனம் புரிந்து வருகின்றமையும் சிறப்பான நிகழ்வாகும்.

### வரலாற்று இலக்கியங்கள்

இப்பழமை ஊரின் சிறப்பையும் அங்கு அருள்பாலிக்கும் சிவன் கோயில்களின் வரலாற்றுச் சிறப்பையும் இவ்வூரில் வாழ்ந்த பல பண்டிதர்களும், புலவர்களும் பதிவு செய்து வைத்துள்ளனர். அந்த வகையில் க.வேலுப்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற "யாழ்ப்பாண வைபவ கௌமுகி" எனும் நூல் இத்தலத்தை உருவாக்கியோரின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஆவணமாக உள்ளது. பண்டிதர். சங்கர வைத்தியலிங்கம் அவர்களால் 1867 ஆம் ஆண்டு ஆக்கியளித்த "வல்லை சிவன் கோயில் குடமுழுக்கு விழாமலர்", சங்கரவேலுப்பிள்ளை 1978 இல் பாடிய "வல்லவை சிவன் கோயில் நடராஜர் ஊஞ்சல் பாமாலை", 1984 ஆம் ஆண்டு வெளிவந்த "சன்னதி சித்திர பெருந்தேர் வெள்ளோட்ட மலர்" என்பனவும், ந. நகுலசிகாமணி எழுதிய "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" என்ற சரித்திர நூலும் இக்கோயிலின் வரலாற்றையும் சிறப்பையும் அறிந்து கொள்வதற்குரிய ஆவணமாக விளங்குகின்றன.

திருச்சிற்றம்பலம்






**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Aadi Maraimathi (Amavasai) Fasting – 4th Aug 2024

Aadi Maraimathi (Amavasai), is a significant day in the Tamil calendar dedicated to paying homage to our ancestors, specifically our deceased fathers. It typically falls in the Tamil month of Aadi (mid-July to mid-August) on the new moon day Maraimathi (Amavasai). This day is considered highly auspicious for performing rituals and offering prayers to deceased family members, seeking their blessings. Devotees that have lost their fathers are generally the ones that take part in the rituals on this day to honour and pay respect to the lives of their father.

By conducting rituals and poosai by singing thevarams devotees can pay their respects to their deceased fathers. Adi Maraimathi (Amavasai) is considered an auspicious time to perform special rituals, offer food, water, and prayers to ancestors. Many people visit temples and perform special pujas to seek their ancestors' blessings. This day is also seen as a time to reflect on the past, seek forgiveness for any wrongdoings towards ancestors, and seek their blessings for future success and prosperity.

Further, Aadi Maraimathi (Amavasai) plays a crucial role in transferring cultural and spiritual knowledge to younger generations. As families come together to perform rituals and honor their ancestors, these practices provide an invaluable opportunity for elders to teach and share traditional customs with the youth. Children and young adults learn the significance of the rituals, the proper methods of conducting them, and the underlying values and beliefs that they represent. This hands-on learning experience helps instill a deep respect for their heritage and ensures that these important cultural practices are not forgotten.Elders often narrate stories about ancestors, recounting their lives, sacrifices, and contributions to the family's legacy. These practises help transfer a wealth of familial knowledge down the lineage and ensures information is never forgotten.

Worshipping fathers, both living and deceased, holds great significance in many cultures, particularly in Saiva traditions. This practice reflects deep respect, gratitude, and recognition of the father's role in the family and society. But specifically on Adi Maraimathi (Amavasai) the children of deceased fathers pay thier respects. Fathers are often seen as providers and protectors, ensuring the family's safety, stability, and growth. Worshipping them is a way to honor their sacrifices and hard work. This respect is extended to deceased fathers, through rituals and prayers. Worshipping fathers symbolises the continuity of family lineage and the connection between generations. It reinforces the idea that the contributions of previous generations are vital to the present and future well-being of the family. It serves as a reminder of one's roots and the values and teachings passed down through generations. Further these practices instill a sense of gratitude and respect in younger generations. They learn to value and honor the efforts and sacrifices made by their fathers. It cultivates a culture of reverence and acknowledgment within the family structure. This is all put with high respect in Saiva philosophy.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal




Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Once Sampanthar and Appar went to Thirumaraikkadu. They entered the temple there, when they arrived at the main inner doors, they saw the doors were kept closed.

Sampanthar enquired about this. He was told that, once the Vedas came and prayed to Sivan.

When the Vedas came out of the inner temple the doors had been kept closed. After that incident no one came before the doors. So the doors were not opened. The local disciples had made a side entra nce to get in for worshipping.



Sampanthar wanted to go into the temple through that main entrance and so he requested Appar to sing a song to open the doors. Appar had sung ten hymns; but the doors did not open. In the last hymn, he scolds Sivan, "Don't you have mercy?" Then the doors opened.

Sampanthar, Appar and other disciples entered into the inner temple with Joy and prayed. When they came out, Appar requested Sampanthar to close and open the doors regularly. Sampanthar sang a song starting with the words"chathuram maraithaan" and it goes as follows:

**சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்**
**மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறைமைந்தா**
**இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்**
**கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே**

**Chathuram maraithaan thuthisey thuvanangkum**
**Mathura polilsuul maraikkaadduraimainthaa**
**Ithunan kiraivaith tharulseyka enakkun**
**Kathavan thirukkappuk kollung karutthaale.**

In English this translates to, the youth who dwells in Maraikkadu surrounded by gardens having sweet honey and is praised and paid homage by the four vetams! Please answer my questions, having compassion on me well. As the doors of your temple should close of their own accord.

Immediately the doors closed. Then the doors started functioning properly. The devotees then went through that main entrance and prayed to Sivan as usual.

To be continued...

# An Outline of Saivism - Source of Ego and Ignorance

It is in the nature of everyone to strive for happiness and avoid sorrow. We think and act to meet this end. Yet, at many times, we do not succeed and end up with opposite results. We have no control over our thoughts, actions and the end results Obviously, our knowledge and action are influenced and impaired by something which Saivism calls anavam. Anavam is the source of our ego and ignorance.


### Original Impurity

Our ability to know, act and desire is impaired by this subtle entity, anavam. Like the husk of paddy or verdigiris on copper, anavam is associated with the soul from time immemorial. It is an inherent pre-cosmic evil and the root cause of misery, and it is not in the nature of the soul. Ignorance, darkness and ego are some of the names by which it is called. Anavam mcans that which makes the soul small, like an atom.

We think before we act: Our action is based on our thought which depends on our knowledge. Ignorance which causes obstacles to our knowledge is, therefore, the base of our problem. We also fail to take a balanced view and act wrongly because of our arrogance. The source of this is our ego. Anavam which is the source of ignorance and ego is considered as the original impurity or moolamalam. Karma and maya help to remove the fetters of anavam.

### Nature of Anavam

Anavam impairs the soul's capabilities in two ways. By itself it obscures the soul's power of knowing. This is its true or special nature and is called its sorupalakinam. In another way, in association with karma and maya, it makes the soul know mistakenly. Karma and maya enable the soul to improve its capability of knowing. They act as dim light in darkness and help us to form an unclear picture, often an incorrect picture, of things. This again is due to anavam. This is the general nature of anavam and is called thadasthalak sanam.



Dr. K. Ganesalingam
Canberra - Australia

Karma and maya act like lamp in darkness. In the dim light, souls often experience difficulties. This is actually due to the darkness of anavam. Without understanding it, other religions mistakenly blame karma and maya as sources of our problems. Except Saivism, other religions do not speak of anavam.

Though it is a common practice to compare anavam with darkness, it is worse than darkness. Darkness obscures the objects but shows itself. Anavam obsures both. Like darkness, anavam is one and not many. When the soul evolves spiritually and receives divine light or divine grace, the fetters of anavam get weakened and removed.

# Fostering Spiritual Resurgence: Reforms for the Youth of Jaffna

In the previous editorial, the disparity between the education imparted to the youth of Jaffna and their practical understanding of spiritual well-being was examined realistically. This discourse would venture to not only explore solutions but also assess their feasibility.

The crucial issues with the status quo are, memorisation being prioritised over understanding, and the failure of the examination system in ensuring that the intent for learning is to last for life. As puzzling as the situation may seem, the necessary steps to rectify the shortcomings were recognised in the classrooms already and all along.

Short-Term Solutions

Immediate steps must include a 'discussion' about the revision of curriculum frameworks to incorporate persuasive and argumentative essay writing tasks in exams and critical inquiry into religious teaching pedagogy. This involves fostering spaces, the most important of them being the classrooms, where youth can engage in meaningful dialogue with mentors, exploring the relevance of ancient wisdom in contemporary contexts. It makes the author disheartened to admit that the South Asian schooling system 'prohibits' a student from taking a strong stance on any topic or discussion. The answer shall always be that which is explicitly dictated in the textbooks and nothing else, and the slightest of deviations would result in an entire cut across the manuscript. While the rest of the world has bid good riddance to this line of thought and education of a Neanderthal, the traditional Sri Lankan classroom's key learning outcomes remain to be 'Silence, Subservience, and Observance'. This way of learning and teaching works wonders in permanently muffling not only a citizen's voice but also their critical mind effectively rendering them lobotomised. This is not a novel realisation at all. Almost every single child would have realised and worried, at least once, that the opportunity to express their opinion, even academically, would never materialise, thus effectively destroying any natural curiosity or thirst for knowledge that



Srisankarshan
Srisatkunarajah
Next Generation Editor
2023 Batch,
Jaffna Hindu College

a child might have had. A brilliant, institutionalised way to prevent the formation of leaders.

So, what can be done? The most potent answer would be educational reform. Instead of layering up an infected wound with plasters, what should be done is to clean it and dress it up properly for once. Although new initiatives may dampen the severity of the situation, the decay must be targeted, assessed, and fixed.

Focussing on the subtle shifts capable of solving this conundrum, 'why not introduce at least one essay task in exams for the student to establish their stance and form a case? Is it too much of a change to ask for? Does this call for the Government to spend hundreds of expensive hours of specialty Labor or entail spending millions on curriculum restructuring? The answer is an obvious No. Why hasn't this happened before then? And if this is truly a straightforward switch, what is stopping us from getting there? It is a matter of priorities and perspectives. I strongly urge people who command respectable influence and the ones who can summon institutionalised pressure to lobby this solution through and make it see the daylight. Although I cannot answer the last two questions too well, I certainly believe that there are far too many intellectuals who can. I also urge organisations working for the spiritual development of youth, to take this notion up and start forums of discourse to strategise and evaluate the solution feasibility and develop new ones as the situation dictates.

Furthermore, partnerships between educational institutions and community-based spiritual centres should be assessed for relevance and effectiveness. Annual mandatory exams conducted in schools by independent institutions that are replicas of the national exams themselves are not achieving anything in society realistically. Strong evaluations of outcomes and goals must be done by these institutions to ensure their relevance and continued presence in society.

Long-Term Solutions

Looking ahead, a sustained commitment to reform demands structural changes in educational policies. Introducing interdisciplinary approaches that integrate spiritual values into various subjects can nurture a holistic understanding of spirituality from an early age. This holistic approach should extend beyond classrooms, encouraging community involvement and fostering a culture where establishing a stance on spirituality, is recognised as a milestone for adolescent development. On the other hand, investing in professional development for educators is crucial. Empowering teachers with pedagogical tools that emphasise critical thinking, empathy, and cultural sensitivity will equip them to effectively navigate the nuances of spiritual education.

Probability of Success

While these reforms hold promise, their success hinges on overcoming entrenched departmental inertia and resistance to change. The existing system, with its emphasis on tradition and adherence to established norms, may pose significant challenges that all realise. Scepticism and reluctance among stakeholders accustomed to conventional methodologies continue to and will impede the swift adoption of innovative approaches that are scientifically proven to work. Yet, the seeds of change have already been sown. Our community's growing awareness of the disconnect between religious education and spiritual practice catalyses advocacy and action.

Finally, Who Should Care?

The responsibility for birthing this transformation rests not only with educators and spiritual leaders but also with policymakers, parents, and the broader community. It requires a unified effort to advocate for curricular reforms, allocate resources (not just monetary) for teacher training, and create supportive environments where youth can explore, debate, and internalise spiritual teachings authentically. In this pursuit, your help is necessary.

# தென்னாட்டில் உயர்தர மாணவர்களிற்கான கௌரவிப்பு


செல்வி. வஜினா பாலகிருஷ்ணன் - கலைப் பிரிவு முதலிடம்


செல்வி. தாரங்கா குகதாஸ் - உயிரியல் பிரிவு முதலிடம்


செல்வி. கிர்த்திகா பத்மலோகன் - வணிகப் பிரிவு முதலிடம்


செல்வன். மதியழகன் டினோஜன் - கணிதப் பிரிவு முதலிடம்

கடந்த ஆனித் திங்கள் 7ம் நாள் நிறைமதி அன்று (21-06-2024 வெள்ளிக்கிழமை) தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், நாற்பத்து ஆறாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு சிறப்பாக இடம் பெற்றிருந்தது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த செந்தமிழ்வேள்வித் தொண்டர் சிவமுருகு இளவேனில் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறி சற்குணராசா அவர்கள், வைத்தியர் சிவத்திரு. சிவமகாலிங்கம் அரவிந்தன் அவர்கள், யா/ சிதம்பரக் கல்லூரி ஆசிரியர் சிவத்திரு. கலாநிதி சு.குணேஸ்வரன் அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் இந்நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக, நடைபெற்று முடிந்த காபொத உயர்தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. அந்தவகையில் உயிரியல் பிரிவில் முதல்பெற்ற யா/ வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி. தாரங்கா குகதாஸ், கணிதப்பிரிவில் முதல்நிலை பெற்ற யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் செல்வன். மதியழகன் டினோஜன், வணிகப்பிரிவில் முதல்நிலை பெற்ற யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி. கிர்த்திகா பத்மலோகன், கலைப்பிரிவில் முதல்நிலை பெற்ற பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி செல்வி. வஜினா பாலகிருஷ்ணன் ஆகியோர்களின் பெறுபேறுகளைப் பாராட்டி, தென்னாடு ஐம்பூதநாதப் பெருமான் முன்னிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் ஐயா அவர்கள் கௌரவம் செய்து வைத்தார்.

திருச்சிற்றம்பலம்

# Acquiring knowledge of knowing the Lord Almighty

Last month Summary:

Sivakan, a 7 year old kid, was explaining to his friends that we are unable to see and perceive even our own bodies, we lack the ability to see them without external instruments, **similarly it is impossible to perceive and see the Lord Almighty with just our limited sense organs.**

The next day when we all met, we continued our discussion from where we left the previous day.

'We arrived at the conclusion that because of our limited knowledge we are unable to perceive the Lord Almighty. Then how do we work towards upgrading our limited knowledge to gain that knowledge with which we can know the Lord Almighty?' was the question by a friend.

I answered him, starting with an example of a baby.

A baby has very little knowledge and experience. As it grows, it gains knowledge of the worldly objects and living beings through observation. It goes through many experiences too. At the age of five, he/she is sent to school.

Initially the child starts learning the alphabets and then slowly understands simple and short words. Once he finishes his first standard, he is able to read a whole lesson by himself and do some simple arithmetic calculations.

As he grows older, the ability and confidence to read the next higher level in the subjects increases. Thus gradually he finishes school, enters the University for higher studies and becomes a scholar.

The Thirumurais - collection of sets of devotional outpourings of Saivaite saints - would mean only a sheaf of papers to a baby. But the same would be a treasure house of wisdom and divinity when the baby grows to be a scholar.



Similarly we are ignorant about the nature of The Lord Almighty since our knowledge is limited. Once we gain expertise and maturity in austerity and understanding, we will be able to understand Him and His nature. Therefore ignorance is the reason for our inability to perceive the Lord Almighty.

The Lord Almighty is all- knowing, Absolute intelligence while our intelligence is limited. Just as the child gains knowledge by learning in school, we too have to learn our lessons in the school of worldly experiences. Thus we gain knowledge and consequently wisdom.

A father would always want all his children to be well educated, gain wisdom and experience. That is why he would send all his children to school, to gain knowledge and wisdom from competent teachers.

The same is true with the Lord Almighty, father of all living beings. This world is the school where we are sent by the Lord to gain knowledge and wisdom. He does this out of His infinite compassion for the souls.

All the students in a school are not brilliant. Some pass with flying colours and some others fail miserably. Similarly, some of us march ahead successfully after gaining wisdom through experiences. Some of us lag behind refusing to learn, despite plenty of experiences.

Similarly we are made to go through various life forms (yonis) - grass, trees, life forms with just one sense, to those with two, three, four or five senses and as human beings with six senses. In reality we had gone through all these births and at present we are in this human form! Out of His infinite compassion for us, we are sent to this world to help us experience the fruits of actions done earlier and to gain wisdom.

What is the lot of the soul in each of these births? It takes birth, grows and lives for some time gaining knowledge through experiences and ultimately dies to take up another body. It does the same thing even in human birth. Sometimes the soul happens to linger in the same yoni for a longer time too, just like some dull uninterested children in school. In each of the births that the soul goes through, it gradually gains knowledge.

How can the soul gain knowledge? The Lord provides the souls with the requisite body, instruments (thathuvams), innumerable worlds (place) and objects of experience (thanu, karana bhuvana bhogam) so that they gain wisdom out of their experiences. All these are provided by the Lord for the sole purpose of knowing Him. This is how we are going through the circle of birth and death.

All my friends were listening to this long explanation with great interest.

**Saiva Philosophy Reference:** The takeaway of this story is the Lord Almighty has compassionately provided us with a place to obtain wisdom to allow us to know him.

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்

# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவனி சிவ அ.வேலுச்சாமி

திருத்தொண்டர் புராணம் என்பதே இந்நூலின் பெயர். பாயிரம் 10 வது பாடலில் ஆசிரியர் பெருமானே கூறுகிறார். 'இங்கிதன் நாமம் கூறின் என்ற பாடலில் **"திருத்தொண்டர் புராணம் என்பாம்"** என்று போற்றுகின்றார். செயற்கரிய செய்கை செய்த பெரியார் சரிதம் கூறும் நூலாதலின் பெரியபுராணம்" என்று வழங்கலாயிற்று.

இஃது ஒரு பெருங்காப்பியம் என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் விளக்குகிறார். ஒப்புயர்வற்ற சுந்தரமூர்த்திகளைத் தலைவராகவும், பரவையார், சங்கிலியார் என்ற இருவரையும் தலைவியராகவும் கொண்டு அவர்கள் கயிலையிலிருந்து உலகுய்யவும், சைவ நெறி தழைத்தோங்கவும், பூவுலகத்தில் அவதரித்து மணந்து, உலகத்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களையும் உணர்த்தி, உய்வித்து மீண்டும் திருக்கயிலை சேர்ந்தார்கள் என்பது காப்பியத்தின் உட்பொருள்.

இப்புராணத்துள் 13 சருக்கங்கள், திருமலைச் சருக்கம் முதல் திருநின்ற சருக்கம் வரை 5 சருக்கங்கள் முதல் காண்டம். வம்பறாவரிவண்டுச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் வரை உள்ள பகுதிகள் இரண்டாம் காண்டம் எனவும் வகுக்கப்பட்டன.

இந்நூலுக்கு முதல் நூலாக வைத்துப் போற்றப் படுவது திருவாரூர்ப் பெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு, 'தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க அவர் பாடியருளிய திருத்தொண்டத் தொகையாகும். வகை நூல் என்று சொல்லுவது திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் உள்நின்று உணர்த்த நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகும். இந்த இரண்டு



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

நூல்களையே ஆதாரமாகக் கொண்டு, தில்லைக் கூத்தப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்க உலகெலாம் என்ற சொல் புராணத்தில் மொத்தம் 15 இடங்களில் வைத்துப் போற்றுகின்றார்.

அதில் இடையிலே வைத்துப் பாடிய இடம் திருஞானசம்பந்த நாயனார் சரிதம், சோதி முத்தின் சிவிகை சூழ்ந்து என்ற பாடலில் "ஐந்தெழுத்து ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்" என்று கூறுகின்றார். இறைவர் முத்துச் சிவிகை வழங்கிய பாடல் அதுவே.

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியான் அம்பலத்து ஆடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

- தில்லைக் கூத்தப்பெருமான் துதி



தெய்வச் சேக்கிழார்

உலகு என்றது உயிர்களைக் குறித்து நின்றது.

### உணர்ந்து ஓதற்கு அரியவன்

உணர்தற்கும் ஓதற்கும் அரியவன். உணர்தல் மனத்தின் தொழில், ஓதுதல் வாக்கின் தொழில், பசுஞான, பாச ஞானங்களுக்கு அப்பாற்பட்டவன் இறைவன். வாக்கு பாசஞானம், மனம் பசுஞானம், **"மாற்ற மனம் கழிய நின்ற மறையோன்"** என்பது திருவாசகம். இங்குக் குறித்தது இறைவனது சொரூப இலக்கணம். இது ஞானிகள் வழிபடுவது. **"அரியானை"** என்ற தில்லைப்பதிகத்தில் **"தெரியாத தத்துவனை"** என்று அப்பர்சாமிகள் துதித்த கருத்தும் காணலாம்.

### நிலவு உலாவிய நீர்மலி வேணியன்

இஃது இறைவனுடைய தடத்த இலக்கணம் குறித்தது. இது அவருடைய உருவத் திருமேனி. அருஉருவத் திருமேனியில் இருந்து உருவம் தாங்கி வருவது உயிர்களுக்கு அருள் புரியும் பொருட்டு. நிலவும் நீரும் சடையில் தாங்கிய வரலாறுகள் அவனது அருளைக் குறிப்பன.

### அலகில் சோதியன்

**"சோதி"** ஈண்டு ஞான ஒளி, இவ்வொளி விளக்க விளங்கும் இல்லக விளக்காகிய சுடர் விளக்கும், பல்லக விளக்காகப் பலரும் காணும் ஞாயிறு, திங்கள் முதலிய சுடர் விளக்குக்களும், இந்திரிய அந்தக் கரண ஆன்ம போதமாகிய **"ஆன்ம விளக்கும்"** அல்லாவாய், இவை எல்லாவற்றையும் கடந்து, சற்பிரகாசமாயும், பரப்பிரகாசமாயும் நிற்றலான் அளவில் சோதியாய் எவற்றிற்கும் மேலாக நிற்றலாற் பரஞ்சோதியாய்த் தானே விளங்குதலாற் சுயஞ்சோதியாய், உள்ள பரஞானமான சிவஞானச் சோதி என்றறிக என்று கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் உரைக்குறிப்பாகச் சிவக்கவிமணி ஐயா அவர்கள் விளக்குகிறார். இது இறைவனது அருவுருத்திருமேனி தடுத்தாட் கொண்டபுராணத்தில் ஆசிரியர் கூறும்போது

நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன (தவமுடையவர்களுக்கு நெஞ்சில் பொலிந்தன). வேதியாதவர் தம்மை வேதிப்பன - (அறியாதவர்களை அறியும்படி செய்வது). சோதியா எழும் சோதியுட் சோதிய - (ஒளிப் பொருள் களுக்கெல்லாம் ஒளிகொடுப்பது). ஆதி மாலவன் காணா அளவினன்- (மாலினாலே காண முடியாத அளவினன்)

அருவம், உருவம், அருவுருவம் என்ற திருமேனிகளைத் தாங்கிய இறைவனே அம்பலத்தில் ஆடுகின்றான். அம்பலத்தாடுவான் என்பது உருவத்திருமேனி, இரகசியம் என்று சொல்வது அருவத்திருமேனி, படிகலிங்கமாக வைத்துப்பூசிப்பது அருவுருவத் திருமேனி. மூவகைத் திருமேனி பற்றிச் சித்தியாரில் கூறும்பொழுது,

**உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த**
**அருமேனி அதுவும் கண்டோம், அருவுருவானபோது**
**திருமேனி உபயம் பெற்றோம்! செப்பிய மூன்றும் நந்தங்**
**கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே**

இறைவன் தன்னுடைய அருட்சக்தியின் மூலமாக மூன்று திருமேனிகளைத் தாங்கி வருவது ஆன்மாக்களின் பிறப்பை நீக்கி அருள் செய்வதற்காக வந்த கருணையே என்று சித்தியார் ஆசிரியர் விளக்குகின்றார்.

1. **"உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்"** என்பதனால் சொரூப சிவ இயல்பும்,

2. **"அலகில் சோதியன்"** என்பதனால் தடத்த இலய சிவ இயல்பும்,

3. **"நிலவுலாவிய நீர்மலிவேணியன்"** என்பதனால் தடத்த போக சிவஇயல்பும்,

4. **"அம்பலத்தாடுவான்"** என்பதனால் தடத்த அதிகார சிவ இயல்பும் கூறப்பட்டமையை அறிந்து கொள்க. (கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்கள் உரைக்குறிப்பு)

**"உணர்வின் நேர்பெற வரும் சிவபோகத்தை ஒழிவின்றி உருவின்கண், அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை"** என்று சேக்கிழார் பெருமான் தில்லைக் கூத்தர் பெருமானைக் கண்ட திருஞானசம்பந்தர் அனுபவத்தை விளக்குகிறார்.

### மலர் சிலம்படி

அடியார்களின் குவிந்த உள்ளத் தாமரைகளை மலர்த்தும் திருவடி என்றலுமாம். சிலம்புநாதத்தின் மூலம் தான் இருக்கும் இடமாகிய திருவடிகளை உணர்த்தி, உயிர்களை வந்து அடையும்படி அழைக்கும் குறிப்பு. கழறிற்றறிவார் நாயனார்க்குப் பெருமான் தினசரிப் பூசையில் திருச்சிலம்பு ஓசை ஒலியளித்தமை காணலாம். **"திருச்சிலம்பு ஓசை ஒலி வழியே சென்று நிருத்தனைக் கும்பிடென்று உந்தீபற"** எனும் திருவாக்கும் காண்க.

### வாழ்த்தி வணங்குவாம்

வணங்குவாம் **"என்றதனால் வணக்கமும்"** வாழ்த்தி என்றதனால்வாழ்த்தும், மலர்சிலம்படி என்றதனால்அத் திருவடிகளை எக்காலத்தும் மனத்தே பதித்த அடியார்களது அடிமைத்திறமும் கூறுவது இந்நூல்.

**"உலகெலாம்"** என்ற திருவாக்குச் சேக்கிழார் பெருமானுக்குத் தில்லைக் கூத்தப் பெருமான் எடுத்துக் கொடுத்த முதல் அடி. இது பிரணவ உருவமுடையது. என்னை? நாதத்தினின்றே பிறப்பது அகரமாதலாலும் அது எல்லா எழுத்துக்களுக்கும் முதலானதாலும் அகரம் பெறப்பட்டது. **"உலகெலாம்"** என்றதில் முதல் உகரமும், இறுதி மகர ஒற்றும் ஆக அகர உகர மகரங்களாகிய வியட்டிப் பிரணவ உருவம் இப்புராணத்திற்கு முறையாம். ஓங்காரத்தில் தோடுடைய என்று தொடங்கிய தமிழ் வேதம் நிலவி உலகெலாம் என்றதில் உள்ள மகர ஒற்றுடன் கூடித்தேவார முதல் பெரியபுராண இறுதியாக உள்ள சைவத்திருமுறை பன்னிரண்டும் மறையேயாய் பிரணவ உருவமுடையன என்பதும் காண்க.

**"ஆயும் நுண்பொருளாகியும் வெளியே அம்பலத்துள் நின்றாடுவார்"** என்பது இயற்பகை நாயனார் புராணத்தில் இறைவன் சூக்குமமான பொருளாக இருந்தாலும் ஆன்மாக்கள் உய்யவேண்டிப் பெருமான் மன்றிலே நின்று திருக்கூத்து இயற்றுகிறார்.

இப்பாடலில் உள்ள நான்கடியும் சைவ சமயத்தின் நான்கு பாதங்களாகிய ஞானம், யோகம், கிரியை, சரியை எனும் நெறிகளை விளக்கும் தன்மையவெனப் போற்றப்பட்டது. இவையே நன்னெறி தோழர்நெறி, மக்கள்நெறி, அடிமைநெறி என்று கூறப்படும்.

(தொடரும்)

ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி
நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்

# தென்னாட்டு நிகழ்வுகள்



மாணிக்கவாசகர் குருபூசை (09-07-2024)



ஆனி உத்தர சிறப்பு திருமஞ்சன வழிபாடுகள் (12-07-2024)





தங்கம்மா அப்பாகுட்டி குருபூசை (19-06-2024)











ஆனித் திங்கள் நிறைமதி வழிபாடும்
இதழ் வெளியீடும் (21-06-2024)



மதுரை தெய்வநெறிக் கழக தலைவர் தென்னாடு வருகை (21-06-2024)



தெய்வத் தமிழில் புதுமனை புகுவிழா வழிபாடுகள் (12-07-2024)



கிளிநொச்சியில் தெய்வத்தமிழில் மங்கள மனையறம் ஏற்கும் விழா (19-06-2024)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து ஏழாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி அச்சகத்தில்” அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 4ம் நாள் அன்று (20-07-2024 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org